thinaboomi.com

பூமி: 32 சுற்று: 05 மார்கழி 16 — RNI Regn. No.61494/94 MA / 36 / 2015-2017

மதுரை, புதன், டிசம்பர் 31, 2025 — சென்னை • மதுரை • திருச்சி • கோவை • நெல்லை • சேலம் • வேலூர் • புதுச்சேரி — பக்கம் 8 — ₹ 3.00





**கலிதா ஜியா மறைவு எதிரொலி: வங்காளதேசத்தில் 3 நாட்கள் துக்கம்; இன்று பொது விடுமுறை அறிவிப்பு**
....2-ம் பக்கம்

**3 நாட்கள் அரசு முறை பயணமாக அமித்ஷா அந்தமான் செல்கிறார்**
...3-ம் பக்கம்

**இந்தியா-நியூசி., ஒருநாள் தொடர்: ஆன்லைன் டிக்கெட் விற்பனை இன்று காலை தொடங்குகிறது**
....6-ம் பக்கம்






முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் தலைமைச்செயலகத்தில், தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கான ஓய்வூதியத்திட்டங்கள் குறித்து ஆராய்ந்திட அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையினை குழுவின் தலைவரும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளருமான ககன்தீப் சிங் பேடி வழங்கினார். இந்நிகழ்வின்போது நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச்செயலாளர் முருகானந்தம், நிதித்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் உதயச்சந்திரன், நிதித்துறை துணைச்செயலாளர் (வரவு-செலவு) பிரத்திக் தாயள், குழு உறுப்பினர் கே.ஆர்.சண்முகம் ஆகியோர் உடனிருந்தனர்.

### அரசு ஊழியர்களின் பழைய ஓய்வூதிய திட்டக்கோரிக்கை:

# முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் இறுதி அறிக்கை சமர்ப்பிப்பு

## ஐ.ஏ.எஸ். தலைமையிலான 3 பேர் கொண்ட குழு வழங்கியது

சென்னை, டிச. 31-

**முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் தமிழ்நாடு அரசு ஊழியர்களின் நீண்ட கால கோரிக்கையான பழைய ஓய்வூதிய திட்டம் தொடர்பான இறுதி அறிக்கையை ஐ.ஏ.எஸ். அதிகாரி ககன் தீப் சிங் பேடி தலைமையிலான 3 பேர் கொண்ட குழுவினர் சமர்ப்பித்தனர். அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாக முதல்வர் விரைவில் அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.**

**தொடர்ந்து கோரிக்கை**

தமிழக அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு, ஊதிய உயர்வு, மருத்துவ வசதிகள், அரசு ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு காப்பீடு, மகப்பேறு விடுப்பு, கடன் உதவி என பல சலுகைகள் வழங்கப்பட்டு வருகிறது. அப்படி இருந்த போதிலும் ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களின் பல ஆண்டுகளாக பழைய ஓய்வூதிய திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும் என தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகின்றனர். இதற்காக முதல்வரின் கவனத்துக்கு கொண்டு செல்லும் வகையில் அவ்வப்போது போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

**விரிவான ஆய்வு...**

இந்நிலையில், பழைய ஓய்வூதிய திட்டம், பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டம் ஆகிய 3 ஓய்வூதிய முறைகள் குறித்தும் விரிவான ஆய்வு மேற்கொண்டு அரசுக்கு அறிக்கை அளிக்க மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரியான ககன் தீப் சிங் பேடி தலைமையில் குழு கடந்த பிப்ரவரி மாதம் அமைக்கப்பட்டது. இந்த குழு 9 மாதங்களுக்குள் அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டிருந்தது.

**பல கட்டங்களாக...**

அதன்படி, அரசு பணியாளர் சங்கங்களுடன் பல கட்டங்களாக ஆலோசனைகள் நடத்திய அந்த குழு, எல்.ஐ.சி. உள்ளிட்ட சம்பந்தப்பட்ட நிதி நிறுவனங்களுடனும் கலந்தாய்வுக் கூட்டங்களை நடத்தி கடந்த அக்டோபர் மாதம் ஓய்வூதிய திட்டங்கள் தொடர்பான இடைக்கால அறிக்கையை தமிழ்நாடு அரசிடம் அந்த குழு சமர்ப்பித்தது. முழு அறிக்கையை டிசம்பர் இறுதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

**பேச்சுவார்த்தைக்கு...**

இந்த நிலையில், இடைக்கால அறிக்கை தொடர்பாக அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு மற்றும் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் ஆலோசனை மேற்கொண்டனர். பின்னர் பழைய ஓய்வூதிய திட்டம் தொடர்பாக அரசு எடுத்துள்ள முடிவு தொடர்பாக அரசு ஊழியர்கள் சங்கங்களை தமிழக அரசு பேச்சுவார்த்தைக்கு அழைத்து கோரிக்கை தொடர்பாகவும் கேட்டறிந்துள்ளனர்.

**விரைவில் அறிவிப்பு...**

இந்த நிலையில் அனைவரின் கோரிக்கைகளும் பரிசீலனை செய்யப்பட்டு இறுதி அறிக்கையை ஐ.ஏ.எஸ். அதிகாரி ககன் தீப் சிங் பேடி தலைமையிலான 3 பேர் கொண்ட குழுவினர் முதல்வர் மு.க. ஸ்டாலினிடம் சமர்ப்பித்துள்ளனர். இந்த இறுதி அறிக்கையின் அடிப்படையில் விரைவில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

### இன்று நள்ளிரவு புத்தாண்டு கொண்டாட்டம்:

# தமிழகம் முழுவதும் தீவிர கண்காணிப்பு

## பாதுகாப்பு பணிக்கு 1 லட்சம் போலீசார் குவிப்பு

சென்னை, டிச. 31-

**இன்று நள்ளிரவு புத்தாண்டு கொண்டாட்டத்தை முன்னிட்டு தமிழகம் முழுவதும் பாதுகாப்பு பணியில் 1 லட்சம் போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர். சென்னையில் மட்டும் 15 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர்.**

ஜனவரி 1-ம் தேதி ஆங்கில புத்தாண்டு (2026) உலகம் முழுவதும் விமரிசையாக கொண்டாடப்பட உள்ளது. இன்று (புதன்கிழமை) நள்ளிரவு உணவகங்கள், கடற்கரை, ரிசார்ட்டுகளில் உற்சாகம் களைகட்டும். புத்தாண்டுக்கு இன்னும் ஒருநாள் மட்டுமே உள்ள நிலையில் நட்சத்திர ஓட்டல்கள் மற்றும் கடற்கரை ரிசார்ட்டுகள் கொண்டாட்டங்களுக்கு தயாராகி வருகிறது.

புத்தாண்டு கொண்டாட்டங்களின் போது பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு தேவையான அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள போலீசார் முடிவு செய்துள்ளனர். புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது எந்தவொரு அசம்பாவிதமும் நடக்கவில்லை என்பதை உறுதி செய்யும் வகையில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள மாநகர போலீஸ் கமிஷனர்கள், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டுகளுக்கு பொறுப்பு டி.ஜி.பி. அறிவுறுத்தி உள்ளார்.

குறிப்பாக பெண்கள், குழந்தைகள் பாதுகாப்பு விஷயத்தில் மிக கவனமாக செயல்படவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அந்தவகையில், தமிழகம் முழுவதும் 1 லட்சம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். சென்னையில் மட்டும் 15 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர்.

குறிப்பாக கடற்கரை, வழிபாட்டு தலங்களில் கூடுதல் போலீசார் பணி அமர்த்தப்பட உள்ளனர். மெரினா கடற்கரையில் மட்டும் 1,000 போலீசார் நிறுத்தப்பட உள்ளனர். புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது கடலில் இறங்கி குளிப்பதற்கு அனுமதி அளிக்கப்படாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, சென்னை பெசன்ட்நகர், திருவான்மியூர், கோவளம், மாமல்லபுரம் உள்ளிட்ட மக்கள் அதிகம் கூடும் கடற்கரையிலும் போலீசார் பாதுகாப்பு பணியில் அமர்த்தப்படுகின்றனர். இதுதவிர கடற்கரை ஓரத்தில் நீச்சல் வீரர்களும் பணியில் அமர்த்தப்பட உள்ளனர். மெரினா போன்ற பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் பெண்கள் மிக பாதுகாப்பாக இருக்க போலீசார்

(கடைசி பக்கம் பார்க்க)

### அ.தி.மு.க. சார்பில் பொதுக்கூட்டம்:

# வீரபாண்டியில் ஜனவரி 4-ம் தேதி எடப்பாடி பழனிசாமி பங்கேற்பு

சென்னை, டிச. 31-

**வரும் ஜனவரி 4-ம் தேதி சேலம் மாவட்டம் வீரபாண்டியில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி பங்கேற்று பேசுகிறார்.**

இதுதொடர்பாக அ.தி.மு.க. தலைமைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-



அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி, 'மக்களைக் காப்போம்; தமிழகத்தை மீட்போம்' என்ற உன்னத நோக்கத்தை லட்சியமாகக் கொண்டு சட்டமன்றத் தொகுதி வாரியாக, தொடர் பிரசார சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார்.

இந்த நிலையில், 'மக்களைக் காப்போம்; தமிழகத்தை மீட்போம்' என்ற உன்னத நோக்கத்துடனான எழுச்சிப் பயணத்தின் தொடர்ச்சியாக, அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி 4-1-2026 (ஞாயிற்றுக்கிழமை) அன்று சேலம் மாவட்டம் வீரபாண்டியில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பங்கேற்று பேசுகிறார். 5-1-2026-ம் தேதி அன்று கள்ளக்குறிச்சி மாவட்ட மகளிர் அணி பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்ற இருக்கிறார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### குடியரசு தின விழாவில் பங்கேற்க

# தமிழ்நாடு அரசின் அலங்கார ஊர்திக்கு மத்திய அரசு அனுமதி

சென்னை, டிச. 31-

**குடியரசு தின விழா அணிவகுப்பில் பங்கேற்க தமிழக அரசின் அலங்கார ஊர்தி இடம்பெற மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.**

டெல்லியில் ஆண்டுதோறும் ஜனவரி 26-ம் தேதி நடைபெறும் குடியரசு தின விழாவில், முப்படைகளின் அணிவகுப்பு, அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு நடைபெறுவது வழக்கம். இதில் பல்வேறு மாநிலங்களின் அலங்கார ஊர்திகள், பல்வேறு துறைகள் மற்றும் துணை ராணுவத்தின் அலங்கார ஊர்திகள் இடம்பெறும். அந்தவகையில் 2026 ஜனவரி 26-ம் தேதி, டெல்லியில் உள்ள கடமை பாதையில் குடியரசு தின விழா கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளது. இதில் 10-க்கும் மேற்பட்ட மாநிலங்களின் அலங்கார ஊர்திகள் அணிவகுக்க உள்ளன.

இந்த நிலையில், 2026 குடியரசு தின விழாவில் தமிழக அரசின் அலங்கார ஊர்தி இடம்பெற மத்திய உள்துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. 'பசுமை மின் சக்தி' என்ற தலைப்பில் தமிழ்நாட்டின் அலங்கார ஊர்தி அணிவகுப்பில் இடம் பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2024-ம் ஆண்டு குடியரசு தின விழா அலங்கார ஊர்திகளில் தமிழ்நாடு பங்கேற்க மத்திய அரசு அனுமதி மறுத்தது. இதற்கு தமிழக அரசு சார்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# பொருளாதார வல்லுநர்களுடன் பிரதமர் நரேந்திரமோடி சந்திப்பு

## பட்ஜெட் குறித்து ஆலோசனை

புதுடெல்லி, டிச. 31-

**பட்ஜெட் குறித்து கருத்துகளை கேட்டறிய புகழ்பெற்ற பொருளாதார வல்லுநர்களுடன் பிரதமர் மோடி நேற்று ஆலோசனை நடத்தினார்.**

2026-27 நிதியாண்டுக்கான பட்ஜெட்டை மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பிப்ரவரி 1-ம் தேதி பாராளுமன்றத்தில் தாக்கல் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சர்வதேச அரசியலில் நிலவும் நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் இந்தியா மீது அமெரிக்கா விதித்துள்ள 50 சதவீத வரி உள்ளிட்ட சூழல்களுக்கு மத்தியில் மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட உள்ளது.




இந்த நிலையில், மத்திய பட்ஜெட் குறித்து கருத்துகளைக் கேட்பதற்காக, புகழ்பெற்ற பொருளாதார வல்லுநர்கள் மற்றும் துறைசார் நிபுணர்களை பிரதமர் மோடி நேற்று சந்தித்து ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். இந்த ஆலோசனைக் கூட்டத்தில் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், நிதி ஆயோக் துணைத் தலைவர் சுமன் பெரி, நிதி ஆயோக் தலைமை செயல் அதிகாரி பி.வி.ஆர். சுப்ரமணியம் மற்றும் நிதி ஆயோக் உறுப்பினர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இதில் பட்ஜெட் குறித்து பிரதமர் மோடி கருத்துக்களை கேட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

### திருத்தணியில் ஒடிசா இளைஞர் தாக்கப்பட்ட சம்பவம்:

# அனைத்து வடமாநில தொழிலாளர்கள் தமிழ்நாட்டில் பாதுகாப்பாக உள்ளனர்

## ஐ.ஜி. அஸ்ரா கர்க் விளக்கம்

சென்னை, டிச. 31-

**திருத்தணியில் ஒடிசாவை சேர்ந்த வடமாநில இளைஞர் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து விளக்கமளித்த ஐ.ஜி. அஸ்ரா கர்க் தமிழகத்தில் வடமாநில தொழிலாளர்கள் பாதுகாப்பாக உள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.**


திருத்தணியில் வடமாநில இளைஞர் மீது 4 சிறார்கள் கஞ்சா போதையில் கொடூரமாக தாக்குதல் நடத்திய காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வெளியாகி பதற்றத்தை ஏற்படுத்தின. இந்த சம்பவத்தில் தொடர்புடைய 4 சிறார்களில் ஒருவர் மட்டும் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். ஏனைய மூன்று சிறார்கள், கூர்நோக்கு இல்லத்தில் அடைக்கப்பட்டுள்ளனர்.

தமிழகம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்திய திருத்தணி சம்பவம் குறித்து வடக்கு மண்டல ஐஜி அஸ்ரா கர்க் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:- திருத்தணி அருகே தாக்குதலுக்குள்ளான ஒடிசா இளைஞர் வேலைக்காக தமிழகத்திற்கு வரவில்லை. அவர் அவ்வப்போது ரயிலில் அரக்கோணம், திருத்தணி ஆகிய பகுதிகளுக்கு பயணித்து வந்தது தெரியவந்துள்ளது. அவர் சுற்றுலா நோக்கில் வந்துள்ளார். அந்த புறநகர் ரயிலில் ஒடிசா இளைஞரை பார்த்த 4 சிறுவர்கள், அவர் தங்களை முறைக்கிறார் என தவறாக கருதி, அந்த நபரை கடுமையாக தாக்கியுள்ளனர்.

இது குறித்து தகவலறிந்ததும் ரயில்வே போலீஸார் அந்த இளைஞரை மீட்டு திருத்தணி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். பின்னர் அங்கிருந்து திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்கும், அதன் பின்னர் சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனைக்கும் அனுப்பப்பட்டார். அங்கு அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சையின் மூலம் அவர் நலமுடன் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. தற்போது அவர் தனது சொந்த ஊருக்கே சென்றுவிட்டார். மருத்துவமனையில் அவர் கைப்பட ஒரு கடிதம் எழுதி கொடுத்துவிட்டு ஊருக்குச் சென்றுள்ளார். அது அவருடைய தனிப்பட்ட முடிவு.

(கடைசி பக்கம் பார்க்க)


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| -20.46 | -3.25 |
| பாயிண்ட் 84,675.08 | பாயிண்ட் 25,938.85 |



**தங்கம்**
1 சவரன் ₹1,00,800
1 கிராம் ₹12,600



**வெள்ளி**
1 கிலோ ₹258,000
1 கிராம் ₹258.00

**டாலர்** ₹89.84

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34



கலிதா ஜியா மறைவு எதிரொலி:

# வங்காளதேசத்தில் 3 நாட்கள் துக்கம்; இன்று பொது விடுமுறை அறிவிப்பு

**டாக்கா, டிச. 31-**

வங்காளதேசத்தின் முன்னாள் பிரதமரும், வங்கதேச தேசியவாத கட்சியின் தலைவருமான கலிதா ஜியாவின் மறைவை அடுத்து

வங்காளதேசத்தில் 3 நாட்கள் துக்கம் அனுசரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், வங்காளதேசத்தில் இன்று பொது விடுமுறை விடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்டை நாடான வங்காளதேசத்தின் முன்னாள் பிரதமரும், வங்கதேச தேசியவாத கட்சியின் தலைவருமான கலிதா ஜியா (80), இதயம் மற்றும் நுரையீரல் தொற்று நோய் காரணமாக டாக்காவில் உள்ள தனியார் மருத்துவமனையில் கடந்த மாதம்



13-ம் தேதி அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு சிறப்பு மருத்துவக் குழுவினர் தீவிர சிகிச்சை அளித்து வந்தனர்.

இந்த நிலையில், கலிதா ஜியா சிகிச்சை பலனின்றி நேற்று காலமானார். அவருக்கு வயது 80. கலிதா ஜியா கடந்த 1991-96 மற்றும் 2001-06 என இரு முறை வங்காளதேச பிரதமராக இருந்தவர் ஆவார். அடுத்த ஆண்டு வங்கதேசத்தில் பாராளுமன்ற தேர்தல் நடக்க உள்ள நிலையில், கலிதா ஜியாவின் மறைவு அக்கட்சிக்குப் பின்னடைவாக கருதப்படுகிறது.

கலீதா ஜியாவின் மறைவைத் தொடர்ந்து, வங்காளதேசத்தில் 3 நாட்கள் துக்கம் அனுசரிக்கப்படும் என்றும், இன்று ஒரு நாள் பொது விடுமுறை விடப்படும் என்றும் அந்நாட்டின் தலைமை ஆலோசகர் முஹம்மது யூனுஸ் அறிவித்துள்ளார். கலீதா ஜியாவின் உடலுக்கு இன்று இறுதி சடங்குகள் செய்யப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

# தைவானை சுற்றி சீனா திடீர் ராணுவ பயிற்சி

## போர் பதற்றம் அதிகரிப்பு

**பீஜிங், டிச. 31-**

தைவானை சுற்றி சீன படைகள் திடீர் ராணுவ பயிற்சி மேற்கொண்டதால் அங்கு போர் பதற்றம் அதிகரித்துள்ளது.

சீனாவின் கட்டுப்பாட்டில் இருந்த தைவான் 1949-ல் தனி நாடாக பிரிந்தது. ஆனால் தைவானை இன்னும் தனது நாட்டின் ஒரு பகுதியாகவே சீனா கருதுகிறது. எனவே அதனை மீண்டும் தன்னுடன் இணைக்க போர்ப்பயிற்சிகளை நடத்தி சீனா பதற்றத்தை தூண்டுகின்றது.

மேலும் தைவானுடன் வேறு எந்த நாடுகளும் தூதரக உறவு வைத்துக் கொள்ளக்கூடாது எனவும் சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது. இதற்கிடையே தைவானை அச்சுறுத்தினால் ராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என ஜப்பான் பிரதமர் சனே தகைச்சி அறிவித்தார்.

ஆனால் தங்களது உள்நாட்டு விவகாரத்தில் தலையிடக் கூடாது என சீனா இதற்கு கடும் கண்டனம் தெரிவித்து இருந்தது. இந்த நிலையில், கூட்டு ராணுவ பயிற்சி நடத்துவதற்காக தைவானை சுற்றிலும் விமானப்படை, கடற்படைகளை சீனா குவித்து வருகிறது. இதனால் தைவான் எல்லையில் தற்போது போர்ப்பதற்றம் அதிகரித்துள்ளது.



தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், கோயம்புத்தூர் மாவட்டம் ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் நடைபெற்ற விழாவில் 9.67 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட உலகத்தரத்திலான அதிநவீன ஹாக்கி மைதானம் உள்பட 162.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 107 திட்டப் பணிகளை திறந்து வைத்து, 31.72 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 10,626 பயனாளிகளுக்கு 136.44 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்தியா-பாக்., போரை நான் நிறுத்தினேன்:


# நெதன்யாகு சந்திப்பின் போது அதிபர் ட்ரம்ப் மீண்டும் பேச்சு

**வாஷிங்டன், டிச. 31-**

இந்தியா-பாகிஸ்தான் போரை நிறுத்தினேன் என்று நெதன்யாகுவுடனான சந்திப்பின்போது மீண்டும் தெரிவித்துள்ள அமெரிக்க அதிபர் ட்ரம்ப், தான் அமெரிக்க அதிபராக பதவியேற்ற பிறகு 8 போர்களை தடுத்து நிறுத்தியதாக அவர் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

இந்தியா- பாகிஸ்தான் இடையேயான போரை வர்த்தகத்தை காரணம் காட்டி நிறுத்தியதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பலமுறை கூறினார். ஆனால் அவரது பேச்சை இந்திய அரசு திட்டவட்டமாக மறுத்துள்ளது. இருப்பினும் ட்ரம்ப் தனது கருத்தை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உடனான சந்திப்பின்போது ட்ரம்ப் மீண்டும் இது பற்றி பேசியுள்ளார். அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பின்போது, அதிபராக பதவி



யேற்ற பிறகு இதுவரை 8 போர்களை தடுத்து நிறுத்தி உள்ளதாக ட்ரம்ப் பெருமிதம் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் கூறியதாவது;-

"நான் 8 போர்களை தடுத்து நிறுத்தினேன். குறிப்பாக அஜர்பைஜான் விவகாரம் குறித்து ரஷிய அதிபர் புதின் என்னிடம் கூறுகையில், 'அந்த போரை நீங்கள் தீர்த்து வைத்ததை என்னால் நம்ப முடியவில்லை. ஏனென்றால் நான் 10 ஆண்டுகளாக முயற்சி செய்து வருகிறேன்' என்று கூறினார். நான் உண்மையில் அதை ஒரே நாளில் தீர்த்து வைத்தேன்.

வர்த்தகம் தான் இதற்கு காரணம். அவர்கள் வர்த்தகம் செய்கிறார்கள். சண்டையிடும் நாடுகளிடம் இனி உங்களுடன் வர்த்தகம் செய்ய மாட்டோம் என்று கூறினோம். அதோடு நான் 200 சதவீத வரிகளை விதித்தேன். அடுத்த நாளே அவர்கள் அழைத்தார்கள், 35 வருட சண்டையை நிறுத்திவிட்டார்கள். இதற்காக எனக்குப் பாராட்டு கிடைத்ததா? இல்லை. நான் இதே போல் 8 போர்களை நிறுத்தி இருக்கிறேன். இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையிலான போரையும் நான் தடுத்து நிறுத்தினேன். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# துருக்கியில் போலீசார் தாக்குதலில் 6 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை

## 3 போலீஸ் அதிகாரிகளும் பலி

**அங்காரா, டிச. 31-**

துருக்கியில் 6 பயங்கரவாதிகள் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலில் 3 போலீஸ் அதிகாரிகளும் பலியானார்கள்.

துருக்கியின் மேற்கு யலோவா மாகாணத்தில் புத்தாண்டு கொண்டாட்டம் களைகட்ட தொடங்கி உள்ளது. இதற்காக வணிக வளாகம், சுற்றுலா தலங்களில் மக்கள் குவிந்து வருகின்றனர்.

இதற்கிடையே அங்குள்ள எல்மாலி நகரில் உள்ள ஒரு வீட்டில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் பதுங்கியிருப்பதாகவும், மக்கள் கூட்டம் நிறைந்த இடங்களை குறிவைத்து தாக்குதல் நடத்த அவர்கள் திட்டமிட்டு இருப்பதாகவும் உளவுத்துறைக்கு தகவல் கிடைத்தது.

அதன்பேரில் பயங்கரவாதிகள் பதுங்கியிருந்த வீட்டை போலீசார் முற்றுகையிட்டனர். அப்போது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 3 போலீஸ் அதிகாரிகள் பலியாகினர். மேலும் 9 பேருக்கு படுகாயம் ஏற்பட்டது.

இதனையடுத்து போலீசார் நடத்திய பதிலடி தாக்குதலில் 6 பயங்கரவாதிகள் சுட்டு கொல்லப்பட்டனர். இஸ்தான்புல்லில் இருந்து 62 மைல் (100 கிலோமீட்டர்) தொலைவில் உள்ள எல்மாலிக் கிராமத்தில் ஏழு மணி நேரத்திற்கும் மேலாக நீடித்த இந்த நடவடிக்கையில் ஆறு பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாகவும், ஐந்து பேர் கைது செய்யப்பட்டதாகவும் துருக்கிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

மரம் மனிதனின் உரம்

# டிரோன் மூலம் புதின் வீட்டை தாக்க முயற்சி

## தொலைபேசியில் நலம் விசாரித்த ட்ரம்ப்

**மாஸ்கோ, டிச. 31-**

ரஷ்ய அதிபர் புதின் வீட்டை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறப்படும் நிலையில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப், புதினிடம் தொலைபேசியில் பேசினார். அப்போது நடந்த நிகழ்வு அதிர்ச்சி அளிப்பதாகவும், அமைதியான முறையில் தீர்வு காண ஜெலன்ஸ்கியிடம் அறிவுறுத்தியதாகவும் ட்ரம்ப் தெரிவித்தார்.

நேட்டோ அமைப்பில் இணைய முயன்ற உக்ரைன் மீது 2022-ல் ரஷ்யா போர் தொடுத்தது. 4 ஆண்டுகளை நெருங்கி வரும் நிலையில் இந்த போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதனையடுத்து அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தலையிட்டு இரு நாடுகளின் தலைவர்களிடமும் தனித்தனியே பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது போர் நிறுத்தம் தொடர்பாக 20 அம்ச ஒப்பந்தம் ஒன்றை ட்ரம்ப் முன்மொழிந்தார். ஆனால் அவற்றில் பெரும்பாலானவை ரஷ்யாவுக்கு சாதகமாக இருப்பதாக உக்ரைன் தரப்பு கூறியது. குறிப்பாக போரில் கைப்பற்றிய பகுதிகளை திரும்ப ஒப்படைக்க முடியாது என ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் கூறினார்.

இதனால் போர் நிறுத்த ஒப்பந்தத்தை உக்ரைன் நிராகரித்தது. இதனால் போர் நிறுத்தம் தொடர்பாக எவ்வித உடன்பாடும் எட்டப்படவில்லை. இதனையடுத்து உக்ரைன் மீதான போரை ரஷ்யா மேலும் தீவிரப்படுத்தியது. அதன்படி இரு நாடுகளும் பரஸ்பரம் சரமாரி தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கிடையில், ரஷ்ய தலைநகர் மாஸ்கோவிற்கு வடக்கே உள்ள நோவ்கோரோட் பிராந்தியத்தில் அந்த நாட்டு அதிபர் விளாடிமிர் புதினின் கிராமப்புற இல்லம் உள்ளது. நேற்று முன்தினம் அதிகாலையில் இந்த வீடு மீது தாக்குதல்கள் நடத்தும் வகையில் டிரோன்கள் பறந்துவந்தன.

இதையடுத்து அங்கு பாதுகாப்புக்கு நின்ற ராணுவத்தினர் டிரோன்களுக்கு பதிலடி கொடுத்தனர். அனைத்து டிரோன்களும் சுட்டு வீழ்த்தப்பட்டதாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர். டிரோன்கள் எந்த சேதத்தையும் ஏற்படுத்தவில்லை என்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு ட்ரம்பின் குழுவுடன் அமைதிப் பேச்சுவார்த்தைகள் தொடரும் என்று ரஷ்ய வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், ரஷ்ய அதிபர் புதின் வீட்டை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறப்படும் நிலையில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப், புதினிடம் தொலைபேசியில் பேசினார். அப்போது நடந்த நிகழ்வு அதிர்ச்சி அளிப்பதாகவும், அமைதியான முறையில் தீர்வு காண ஜெலன்ஸ்கியிடம் அறிவுறுத்தியதாகவும் ட்ரம்ப் தெரிவித்தார்.

# பிரியங்காவின் மகன் ரைஹானுக்கு இன்று ரந்தம்பூரில் நிச்சயதார்த்தம்

## டெல்லி பெண்ணை மணக்கிறார்

**ஜெயப்பூர், டிச. 31-**

காங்கிரஸ் எம்.பி. பிரியங்கா காந்தி மற்றும் தொழிலதிபர் ராபர்ட் வதேராவின் மகனான ரைஹான் வதேராவிற்கும், டெல்லியைச் சேர்ந்த அவிவா பேக் என்ற பெண்ணிற்கும் நிச்சயதார்த்தம் நடைபெற உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.


7 ஆண்டுகளாக இருவரும் பழகி வந்தநிலையில் இரு குடும்பத்தினர் முன்னிலையில் தனது காதலை வெளிப்படுத்தியுள்ளார் ரைஹான். அதனை அவிவா ஏற்றுக்கொண்ட நிலையில்



இரு குடும்பத்தினரும் திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து இன்று ராஜஸ்தானின் ரந்தம்பூரில் நிச்சயதார்த்தம் நடைபெற உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. திருமண தேதி விரைவில் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அவிவா பேக் டெல்லியை சேர்ந்த ஒரு புகைப்பட கலைஞர் ஆவார். புகைப்பட ஸ்டுடியோ மற்றும் தயாரிப்பு நிறுவனத்தின் இணை நிறுவனராக உள்ளார். அவிவா பேக் மற்றும் அவரது குடும்பத்தினர் டெல்லியில் வசிக்கின்றனர். அவரது தந்தை இம்ரான் பெக் ஒரு தொழிலதிபர். ரைஹான் வதேராவும் ஒரு புகைப்பட கலைஞர் என்பது குறிப்பிடத்தக்கது.

**31-12-2025**



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** வாக்கு மேன்மையால் பணவரவு ஏற்படும். சந்ததி விருத்தி, பதவி உயர்வு, மனத்திருப்தி என அனைத்தும் இராஜயோகம்தான். வாகன மற்றும் போஜன சுகங்கள் கூடிவரும்.

**ரிஷபம்:-** தேவையற்ற பொருட்களை வாங்குவதால் வீட்டில் பெண்களால் பணவிரயம் ஏற்படும். இடைவிடாத பணி காரணமாக வேளைக்கு உணவருந்து முடியாத நிலை ஏற்படும். நாவடக்கம் தேவை.

**மிதுனம்:-** பிறருக்கு உதவிபுரிவதில் பெருமகிழ்ச்சி அடைவீர்கள். எதிர்பார்த்த தனவரவு கைக்கு வந்து சேரும். தானதருமங்களில் ஆர்வம் ஏற்படும். மாணவர்களின் கல்வித் தரம் உயரும்.

**கடகம்:-** அரசு வழியில் பல நன்மைகளை எதிர்பார்க்கலாம். பதவி உயர்வின் மூலமாக சம்பாத்தியமும், அந்தஸ்தும் உயரும். எல்லா வகையிலும் ஏற்றம் தரும் நாள்.

**சிம்மம்:-** இன்று உங்கள் காட்டில் மழைதான். அனைத்து பாக்கியங்களும் பெருகும். தெய்வ நம்பிக்கையால், வாழ்வில் திருப்பங்கள் ஏற்படும். தொழில் வியாபாரம் விருத்தி அடையும்.

**கன்னி:-** சோதனைகளையும் சாதனை ஆக்குவீர்கள். வியாபார விருத்திக்குக் கடினமான உழைப்புத் தேவைப்படும். மாணவர்களுக்குப் படிப்பில் கூடுதல் கவனம் தேவை.

**துலாம்:-** பெரிய மனிதர்கள் தொடர்பால் நல்லது நடக்கும். அரசு ஆதரவு கிடைக்கும். வளமான வாழ்க்கை வாசற்கதவைத் தட்டும். புகழ் ஓங்கும். விருப்பங்களும் கைகூடும். 7

**விருச்சிகம்:-** பலவழிகளிலும் தனவரவு அதிகரிக்கும். காரியங்களில் கண்டிப்பாய் வெற்றி கிடைக்கும். தன்னம்பிக்கையும், தைரியமும் பெருகும். பயணங்களில் நன்மைகள் ஏற்படும் நல்ல நாள்.

**தனுசு:-** வியாபாரத்தில் தனலாபம் அதிகரிக்கும். பிள்ளைகள் மேல் பாசம் அதிகரிக்கும். காரியம் யாவினும் கை கொடுப்பாள் மனைவி. நல்ல நண்பர்கள் சேர்க்கையும் ஏற்படும். உற்சாகம் பிறக்கும்.

**மகரம்:-** தூக்கம் குறைவதால், உடல் நலம் கெடலாம். அன்னையின் நலத்தில் அக்கறை கொள்ள வேண்டிய நாள். வியாபாரத்தில் திருப்திகரமான வரவுகள் இருக்காது.

**கும்பம்:-** நுட்பமான வேலைகளைச் சிறப்பாகச் செய்தாலும் நல்ல பெயர் இருக்காது. பிள்ளைகளின் ஆரோக்கியத்தைப் பேணிக் காப்பது நல்லது. பயணத்தில் எச்சரிக்கையாக இருக்கவேண்டிய நாள்.

**மீனம்:-** முறையற்ற வழிகளில் பணம் வரலாம். உறவுகளிடையே மனக்கசப்பு உருவாகலாம். கோபத்தைக் குறைத்தால் நன்மை ஏற்படும். கல்வியில் வெற்றி பெற கவனமாகப் படிக்கவும்.

புத்தாண்டு கொண்டாட்டம் எதிரொலி:

# புதுச்சேரியில் பாதுகாப்பு பணியில் 2 ஆயிரம் போலீசார் குவிப்பு

**புதுச்சேரி, டிச. 31-**

புதுச்சேரியில் புத்தாண்டு கொண்டாட்டத்திற்கு பாதுகாப்பு பணியில் 2 ஆயிரம் போலீசார் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

நாளை புத்தாண்டு பிறக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் புதுச்சேரியில் புத்தாண்டு கொண்டாட்டம் வெகு விமர்சையாக நடைபெறும். புத்தாண்டை கொண்டாட வெளி மாநிலங்களில் இருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் புதுச்சேரிக்கு திரளுவார்கள். அதுபோல் இந்தாண்டு புத்தாண்டு கொண்டாட்டமும் புதுச்சேரியில் உற்சாகமாக கொண்டாடப்படுகிறது. புத்தாண்டை கொண்டாடப்படும் கடற்கரை சாலையில் அரசு சுற்றுலா துறை சார்பில் இசை நிகழ்ச்சி உள்பட பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

புதுச்சேரியில் புத்தாண்டை கொண்டாட வெளிமாநில சுற்றுலா பயணிகள் கடந்த ஒரு வாரமாக புதுச்சேரிக்கு படையெடுத்து வருகிறார்கள். இதனால் புதுச்சேரியில் தங்கும் விடுதிகள், ஓட்டல்களில் அறைகள் நிரம்பி வழிகின்றன. புதுச்சேரியில் உள்ள விடுதிகள் அனைத்தும் நிரம்பி விட்டதால் சுற்றுலா பயணிகள் புதுச்சேரி அருகே கோட்டக்குப்பம் பகுதியில் உள்ள தனியார் விடுதிகளை நோக்கி செல்கின்றனர். புதுச்சேரி நகர் முழுவதும் சுற்றுலா பயணிகள் கூட்டம் அலைமோதுவதால் போக்குவரத்து நெரிசல் இருந்து வருகிறது. இந்த நிலையில் புத்தாண்டு கொண்டாட்டத்தையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து புதுச்சேரி போலீஸ் டி.ஐ.ஜி. சத்திய சுந்தரம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:- புதுச்சேரியில் புத்தாண்டை பொதுமக்கள் அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும் கொண்டாடும் வகையில் காவல்துறை பல்வேறு நடவடிக்கை எடுத்து வருகிறது. புத்தாண்டை தினத்தன்று 2 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

புதுச்சேரி முழுவதும் போக்குவரத்து போலீசார் குவிக்கப்பட்டு கண்காணிப்பு பணியில் ஈடுபடுவார்கள். புதுவை எல்லைகளில் வெளிமாநிலங்களில் இருந்து வரும் வாகனங்கள் தீவிர பரிசோதனைக்கு பின்னரே அனுமதிக்கப்படும். புதுச்சேரியில் மதுகுடித்து விட்டு வாகனம் ஓட்டுவதை கண்காணிக்க 50 கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் தங்கள் சீருடையில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தி பணியில் ஈடுபடுவார்கள். மேலும் மதுகுடித்திருப்பதை கண்டறியும் கருவி (பிரீத் அனலைசர்) சோதனை மேற்கொள்வார்கள். இருசக்கர வாகனத்தில் 3 பேர் பயணிக்கக்கூடாது. அதிக வேகத்தில் செல்லக்கூடாது இருசக்கர வாகனங்களில் சாகசங்கள் செய்யக்கூடாது அதிக இரைச்சல் எழுப்பக்கூடாது. இதனை இன்டர்செப்டர் வாகனம் மூலமாக கண்கா ணிக்கப்படும். இதனை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அதிபர் புதின் வீட்டின் மீதான தாக்குதலுக்கு மோடி வருத்தம்

## பகையை முடிவுக்கு கொண்டு வர வலியுறுத்தல்

**புதுடெல்லி, டிச. 31-**

ரஷ்ய அதிபர் விளாதிமீர் புதினின் வீட்டைக் குறிவைத்து உக்ரைன் நடத்திய தாக்குதலுக்கு பிரதமர் நரேந்திர மோடி வருத்தம் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய அதிபர் புதினின் விட்டைக் குறிவைத்து, உக்ரைன் ராணுவம் 91 ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தியதாக, அந்நாட்டின் வெளியுறவு அமைச்சகம் அறிவித்துள்ளது. இந்தக் குற்றச்சாட்டுகளை உக்ரைன் அரசு நிராகரித்துள்ளது. இருப்பினும், உக்ரைன் மீதான ரஷ்யாவின் இந்தப் பரபரப்பு குற்றச்சாட்டுகளுக்கு உலகின் முக்கிய தலைவர்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில், தாக்குதலில் ரஷ்ய அதிபர் புதினின் வீடு குறிவைக்கப்பட்டதாக வெளியாகும் செய்திகள் அனைத்தும் வருத்தமளிக்கின்றன என பிரதமர் மோடி தனது எக்ஸ் தளப் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி, அவர் அந்தப் பதிவில் கூறியதாவது: ரஷ்ய அதிபரின் வீடு குறிவைக்கப்பட்டதாக வெளியாகும் செய்திகள் குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம். பகையை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சியில் சம்பந்தப்பட்ட அனைவரும் கவனம் செலுத்துமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்'' எனக் கூறியுள்ளார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்



கும்மிடிப்பூண்டி தொகுதி சென்ற அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், தமிழக எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி கே.பழனிச்சாமிக்கு திருவள்ளூர் தெற்கு மாவட்ட அ.தி.மு.க. மாணவரணி பொருளாளர் டாக்டர் ச.வெங்கடேசன் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.

### தமிழகத்தில் போதைப் பொருட்களால்
# இளைஞர்களின் எதிர்காலம் சீரழிகிறது - விஜய் வருத்தம்

சென்னை, டிச. 31-

தமிழகத்தில் இளைஞர்களை நல்வழிப் பாதையில் கொண்டுசெல்லும் திட்டங்கள் இல்லை என தவெக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:-

சென்னையிலிருந்து திருத்தணி சென்ற ரெயிலில் இளைஞர்கள் சிலர், நேற்று மற்றொரு இளைஞரைக் கொடூரமாகத் தாக்கிய சம்பவம், தமிழகம் எத்தகைய அபாயகரமான எதிர்காலத்தை நோக்கிப் பயணிக்கிறது என்ற அச்சத்தையும் அதிர்வலைகளையும் மக்களிடையே ஏற்படுத்தி உள்ளது. இளைஞர்கள் தவறான பாதையில் செல்வதை அரசு முன்கூட்டியே கண்டறிந்து



தடுக்கவில்லை. இளைஞர்கள் எக்கேடும் கெட்டு வீணாய்ப் போனால் நமக்கென்ன என்ற ஆளும் அரசின் அலட்சியத்தையும் பொறுப்பின்மையையுமே இந்தச் சம்பவம் எடுத்துக் காட்டுகிறது.

சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு, போதைப் பொருட்களால் இளைஞர்களின் எதிர்காலம் சீரழிந்து வருகிறது. தமிழகத்தில் இளைஞர்களை நல்வழிப் பாதையில் கொண்டுசெல்லும் திட்டங்கள் இல்லை. இளைஞர்கள் நல்ல முறையில் கல்வி கற்க, ஏற்ற சூழல் இல்லை. தகுதிக்கு ஏற்ற வேலைவாய்ப்புகள் இல்லை. புத்தாக்கம் இல்லை. புதிய முயற்சிகளுக்கு ஊக்கம் இல்லை. இவை எவற்றையும் ஏற்படுத்திக் கொடுக்காமல், யாருக்காக இந்த ஆட்சியை நடத்துகிறீர்கள்? எஞ்சியிருக்கக் கூடிய ஆட்சிக் காலத்திலாவது போதைப் பொருட்களின் புழக்கத்தை முழுவதுமாகக் கட்டுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கபட நாடக அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 3 நாட்கள் அரசு முறை பயணமாக
# அமித்ஷா 2-ம் தேதி அந்தமான் பயணம்

டெல்லி, டிச. 31-

3 நாட்கள் அரசு முறை பயணமாக மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா 2-ம் தேதி அந்தமான் செல்கிறார்.

3 நாட்கள் அரசு முறை பயணமாக உள்துறை அமைச்சர் அமித்ஷா வரும் 2ம் தேதி அந்தமான் நிகோபார் தீவுகளுக்கு செல்கிறார். அவரை அந்தமான் யூனியன் பிரதேச கவர்னர் ஜோஷி விமான நிலையத்திற்கு நேரில் சென்று வரவேற்கிறார். அதன்பின்னர் 3-ம் தேதி நாடாளுமன்ற ஆலோசனைக் குழு கூட்டம் நடைபெறுகிறது. இந்த ஆலோசனை கூட்டத்திற்கு அமித்ஷா தலைமை தாங்குகிறார். இதையடுத்து குற்றவியல் சட்டவிதி தொகுப்பு தொடர்பான ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்கிறார். மேலும், பல்வேறு நிகழ்ச்சிகளிலும் அவர் பங்கேற்கிறார். 3 நாட்கள் பயணத்தை நிறைவு செய்தபின் 4-ம் தேதி அமித்ஷா டெல்லி திரும்புகிறார்.




தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினை தலைமைச் செயலகத்தில், மூக்கையூர் தேவாலயத்தின் பாரீஷ் பாதிரியார் பங்குத் தந்தை அருள் ஜீவா ஆசீர்வாதம், பாரீஷ் தேவாலயம் தலைவர் ஜேசு ராஜா, இராமேஸ்வரம் அனைத்து இயந்திரமாக்கப்பட்ட படகு உரிமையாளர்கள் சங்க ஆலோசகர் தேவதாஜ் நாகசாமி, தங்கச்சிமடம் - ராமநாதபுரம் மாவட்ட ஆழ்கடல் மீனவர் சங்கத் தலைவர் ஆனந்த் பைவா, ஆகியோர் சந்தித்து, ராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், மூக்கையூர் கிராமத்தில் இருக்கின்ற தொன்மை வாய்ந்த புனித யாக்கோபு தேவாலயம், 1 கோடியே 42 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

### குண்டர் சட்டத்தை உள்நோக்கத்துடன்
# பிரயோகித்தால் நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு அரசுக்கு ஐகோர்ட் உத்தரவு

சென்னை, டிச. 31-

குண்டர் சட்டம் உள்நோக்கத்துடன் பிரயோகித்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக அரசுக்கு ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

சார்-பதிவாளரை பணம் கேட்டு மிரட்டியதாக வாராகி என்பவரை மயிலாப்பூர் போலீஸார் செப்.13-ம் தேதி கைது செய்தனர். பின்னர் அவரை குண்டர் தடுப்புச் சட்டத்தில் சிறையில் அடைக்க சென்னை மாநகர காவல் ஆணையர் உத்தரவிட்டார். யூடியூபர் வாராகியை குண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்க சென்னை காவல் ஆணையர் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து அவரின் மனைவி நீலிமா வழக்கு தொடர்ந்து இருந்தார்.


இந்த வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், வராகிக்கு 3 மாதம் இடைக்கால ஜாமீன் வழங்கி உத்தரவிட்டுள்ளது. 12 வாரங்களுக்குள் போலீசார் பதிலளிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், உள்நோக்கத்துடன் குண்டர் தடுப்பு சட்டத்தை பிரயோகிக்கும் காவல் அதிகாரிகள் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு அரசுக்கு ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

### ஆவின் பால் பாக்கெட்டுகளில்
# எஸ்.ஐ.ஆர். விழிப்புணர்வு வாசகம்

சென்னை, டிச. 31-

எஸ்.ஐ.ஆர். விழிப்புணர்வு வாசகம் ஆவின் பால் பாக்கெட்டுகளில் அச்சிடப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தமிழகம் முழுவதும் எஸ்.ஐ.ஆர். பணிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், வரைவு வாக்காளர் பட்டியல் கடந்த 19-ந்தேதி வெளியானது. அப்போது பல்வேறு காரணங்களை குறிப்பிட்டு தமிழகத்தில் 97 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் அறிவித்தது. எஸ்.ஐ.ஆர். பட்டியலில் இடம்பெறாதவர்கள் மீண்டும் விண்ணப்பிப்பதற்காக தேர்தல் ஆணையம் கால அவகாசம் வழங்கியுள்ளது.




அதன்படி கடந்த 27 மற்றும் 28 ஆகிய தேதிகளில் சிறப்பு முகாம் நடைபெற்றது. வாக்காளர் பட்டியலில் இடம் பெறாதவர்கள், இந்த சிறப்பு முகாமில் கலந்து கொண்டு மீண்டும் விண்ணப்பித்தனர். வருகிற 3 மற்றும் 4 ஆகிய தேதிகளிலும் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல், திருத்தம் செய்ய ஜனவரி 18 ஆம் தேதி கடைசி நாளாகும்.

இந்த நிலையில், எஸ்.ஐ.ஆர். குறித்த விழிப்புணர்வு வாசகம் ஆவின் பால் பாக்கெட்டுகளில் அச்சிடப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதில், வாக்காளர் பட்டியலில் விடுபட்டவர்கள், தங்களது பெயரை இணைப்பதற்கான கடைசி தேதி (18-01-2026) இடம்பெற்றுள்ளது. பிப்ரவரி 17 ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். இறுதி வாக்காளர் பட்டியலில் இடம் பெறுபவர்களே வருகிற சட்டமன்ற தேர்தலில் வாக்களிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்நாட்டில் போதை பழக்கம் பெரிய அளவில் குறைந்துள்ளது
### அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்

சென்னை, டிச. 31-

தமிழகத்தை போதைப் பொருள் இல்லாத மாநிலமாக மாற்றி இருக்கிறோம் என்று மருத்துவத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் கூறினார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் நேற்று செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது; போதைப் பொருள்களுக்கு எதிராக இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு எவ்வளவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை எதிர்க்கட்சியினர் அனைவரும் அறிவார்கள். குறிப்பாக எடப்பாடி பழனிசாமி முதல்வராக இருந்தபோதுதான் போதைப் பொருள் நடமாட்டம் அதிகரித்தது.

குட்கா உள்ளிட்ட போதைப் பொருள்களின் நடமாட்டத்தை தடுக்க வேண்டும் என்று அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மு.க.ஸ்டாலின் கூறினார். இல்லையென மறுத்த நிலையில், மறுநாளே 21 சட்டப்பேரவை உறுப்பினர்கள் பான் மசாலா உள்ளிட்ட பொருள்களை எடுத்துச் சென்று காட்டினர்.

அக்கறை உள்ள முதல்வராக இருந்திருந்தால் எங்கே கிடைத்தது எனக் கேட்டு நடவடிக்கை எடுத்திருப்பார். ஆனால், 21 எம்எல்ஏக்கள் மீது நடவடிக்கை எடுக்க பரிந்துரைத்தார். நாங்கள் பொறுப்பேற்ற பிறகு மிகப் பெரிய அளவில் கட்டுப்படுத்து போதைப் பொருள் இல்லாத மாநிலமாக மாற்றியுள்ளோம்.

கஞ்சாவைப் பொறுத்தவரை தமிழகத்தில் இல்லாத நிலையை உருவாக்கியுள்ளோம். எதிர்க்கட்சியினர் எங்கேயாவது விற்கிறார்கள் என்று கூறினால், அவர்களின் பெயர் ரகசியம் காத்து நடவடிக்கை மேற்கொள்வோம். பள்ளி, கல்லூரிகளில் போதைப் பொருள்களுக்கு எதிராக ஆண்டுதோறும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது" இவ்வாறு அவர் கூறினார்.

### மராட்டிய மாநகராட்சி தேர்தல்:
# வேட்பு மனு தாக்கல் இன்றுடன் நிறைவு

மும்பை, டிச. 31-

மராட்டிய மாநிலத்தில் நடைபெறவுள்ள மாநகராட்சி தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் இன்றுடன் நிறைவடைகிறது.

மராட்டிய மாநிலத்தில் அரசியல் களம் அடிக்கடி மாறி வருகிறது. அங்கு சமீபத்தில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல் முதல் கட்டத்தில் பா.ஜ.க. மிகப் பெரிய அளவில் வெற்றியை பெற்றது. 2-வது கட்டமாக புனே, பிம்ப்ரிசிஞ்சவட் உள்ளிட்ட 29 மாநகராட்சிகளுக்கு வரும் 15-ம் தேதி தேர்தல் நடைபெறுகிறது.

இந்நிலையில் வேட்பு மனு தாக்கல் செய்ய இன்று (செவ்வாய்க்கிழமை) கடைசி நாளாகும். கடந்த ஒரு வாரமாக கூட்டணி பேச்சுவார்த்தைகள் மற்றும் வார்டு பங்கீட்டில் ஒற்றுமையின்மை உள்ளிட்ட காரணங்களால் மந்தமாக இருந்த மனு தாக்கல், வார்டு பங்கீடு ஒப்பந்தங்கள் கிட்டத்தட்ட இறுதியானதை தொடர்ந்து வேகம் எடுத்துள்ளது.

மும்பை மாநகராட்சியை பொறுத்தவரை வேட்பு மனு தாக்கல் செய்வதற்காக 23 தேர்தல் நடத்தும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டு உள்ளனர். மனு தாக்கல் தொடங்கிய கடந்த 23-ந் தேதியில் இருந்து வெறும் 44 பேர் மட்டுமே வேட்பு மனு தாக்கல் செய்திருந்தனர். ஆனால் நேற்று முன்தினம் ஒரே நாளில் 357 பேர் மனு தாக்கல் செய்துள்ளனர். இதன் மூலம் இதுவரை தாக்கல் செய்யப்பட்ட மொத்த மனுக்களின் எண்ணிக்கை 401-ஆக உயர்ந்துள்ளது.

நேற்று ஆயிரக்கணக்கானோர் வேட்பு மனு தாக்கல் செய்தனர். இதனால் தேர்தல் நடத்தும் அதிகாரிகளின் அலுவலக வளாகங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு இருந்தது. இதே போல மாநிலம் முழுவதும் உள்ள தேர்தல் அலுவலகங்களில் வேட்பாளர்கள் தங்களின் பலத்தை நிரூபிக்கும் வகையில் பிரமாண்ட ஊர்வலங்களுடன் மனு தாக்கல் செய்ய திட்டமிட்டுள்ளனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

### கரூர் கூட்ட நெரிசல் வழக்கு:
# டெல்லி சி.பி.ஐ. அலுவலகத்தில் 2-வது நாளாக த.வெ.க. நிர்வாகிகள் ஆஜர்

புதுடெல்லி, டிச. 31-

கரூர் கூட்ட நெரிசல் தொடர்பாக டெல்லியில் உள்ள சி.பி.ஐ. அலுவலகத்தில் த.வெ.க. நிர்வாகிகள் 2-வது நாளாக ஆஜராகினர்.

கரூரில் கடந்த செப்டம்பர் 27-ந்தேதி த.வெ.க. தலைவர் விஜய் மக்கள் சந்திப்பு கூட்டம் நடத்தினார். அப்போது நெரிசலில் சிக்கி 41 பேர் பலியாகினர். இந்த சம்பவம் குறித்து சி.பி.ஐ. விசாரணை நடத்தி வருகிறது. இதனையடுத்து சி.பி.ஐ. அதிகாரிகள் கரூரில் முகாமிட்டு விசாரணை நடத்தி வருகின்றனர். இதற்கிடையில், பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, சி.டி.நிர்மல்குமார், கரூர் மாவட்டச் செயலாளர் மதியழகன் ஆகியோர் டெல்லியில் உள்ள சி.பி.ஐ. அலுவலகத்தில் நேரில் ஆஜராகுமாறு அவர்களுக்கு சி.பி.ஐ. சம்மன் அனுப்பியிருந்தது.

அதன்படி, புஸ்சி ஆனந்த்



உள்ளிட்ட 4 பேரும் நேற்று முன்தினம் டெல்லியில் உள்ள சி.பி.ஐ. தலைமை அலுவலகத்தில் ஆஜராகினர். காலையில் தொடங்கிய விசாரணை இரவு 7.25 மணி வரை நீடித்தது. சுமார் 9 மணி நேரத்திற்கு மேலாக இந்த விசாரணை நீடித்தது. இந்த விசாரணை தொடர்ந்து விஜய்க்கும் சம்மன் அனுப்ப சி.பி.ஐ. திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியானது.

இந்த நிலையில், கரூர் கூட்ட நெரிசல் வழக்கின் விசாரணைக்காக சி.பி.ஐ. அலுவலகத்தில் 2-வது நாளாக நேற்று த.வெ.க. நிர்வாகிகள் என். ஆனந்த், ஆதவ் அர்ஜுனா ஆஜராகினர். அதே போல் கரூர் மாவட்ட கலெக்டர் தங்கவேல், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஜோஷ் தங்கையா மற்றும் காவல்துறை அதிகாரிகளும் சி.பி.ஐ. விசாரணைக்கு ஆஜராகினர். அவர்களிடம் சி.பி.ஐ. அதிகாரி சுனில்குமார் தலைமையிலான குழுவினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

### கருணாநிதி நினைவிடத்தில்
# தூய்மைப்பணியாளர்கள் போராட்டம்

சென்னை, டிச. 31-

சென்னை மெரினாவில் உள்ள கருணாநிதி நினைவிடத்தில் தூய்மை பணியாளர்கள் திடீர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தூய்மைப் பணிகளை தனியாரிடம் ஒப்படைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், பணி நிரந்தரம் கோரியும் சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள் கடந்த 2 மாதங்களாக பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அவர்களுடன் அரசு தரப்பில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இருப்பினும் இதுவரை சுமூகமான தீர்வு எட்டப்படாததால் போராட்டம் தொடர்ந்து வருகிறது. இந்த நிலையில் நேற்று காலையில் தி.மு.க. தலைமையகமான அண்ணா அறிவாலயம் முன்பு தூய்மைப் பணியாளர்கள் போராட்டம் நடத்தினர். அவர்களை போலீசார் கைது செய்தனர். ஒரு தரப்பினர் கைது செய்யப்பட்ட நிலையில், மற்றொரு தரப்பினர் சென்னை அண்ணா அறிவாலயம் முன்பு மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து அந்த பகுதியில் 100-க்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் அண்ணா அறிவாலயத்தைத் தொடர்ந்து, சென்னை மெரினாவில் உள்ள முன்னாள் முதல்வர் கருணாநிதி நினைவிடத்தில் தற்போது தூய்மைப் பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். தூய்மைப் பணிகளை தனியாரிடம் ஒப்படைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், பணி நிரந்தரம் கோரியும் பதாகைகளை ஏந்தி, முழக்கமிட்டு போராட்டம் நடத்தினர். இதைத் தொடர்ந்து போலீசார் அவர்களை கைது செய்ய முயன்றனர். அப்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மற்றும் போலீசார் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதனால் அந்த பகுதியில் பரபரப்பு நிலவியது.

# இடைநிலை ஆசிரியர்கள் 5-வது நாளாக போராட்டம்

சென்னை, டிச. 31-

சென்னை எழும்பூரில் உள்ள கல்வி அலுவலகம் அருகே இடைநிலை ஆசிரியர்கள் 5-வது நாளாக நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம வேலைக்கு சம ஊதியம்' என்ற கோரிக்கையை வலியுறுத்தி, இடைநிலை ஆசிரியர்கள் பல ஆண்டுகளாக போராடி வருகின்றனர். கடந்த 26ம் தேதி மீண்டும் கோரிக்கைகளை வலியுறுத்தி, சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள டி.பி.ஐ. வளாகத்தை முற்று கையிட்டு போராட்டம் நடத்தினர். போலீசார் அவர்களை கைது செய்து திருமண மண்டபங்களில் அடைத்து மாலை விடுவித்தனர். இரண்டாவது நாளாக 27-ந்தேதி, சென்னை எழும்பூரில் உள்ள மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். போலீசார் அவர்களை கைது செய்து மாலை விடுவித்தனர்.

மூன்றாம் நாளாக கடந்த 3 தினங்களுக்கு முன்பு சென்னை பிராட்வேயில் உள்ள கலெக்டர் அலுவலகத்தை திடீரென முற்றுகையிட்டு, நுழைவு வாயிலில் அமர்ந்து கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினர். போலீசார் விரைந்து வந்து, போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களை கைது செய்தனர். நேற்று முன்தினம் உழைப்பாளர் சிலை அருகே இடைநிலை ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றும் வரை தொடர் போராட்டத்தில் ஈடுபடுவோம் என அவர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில், சம வேலைக்கு சம ஊதியம் வழங்க வலியுறுத்தி சென்னையில் இடைநிலை பதிவு மூப்பு ஆசிரியர்கள் 5-வது நாளாக போராட்டம் நடத்தி வருகின்றனர். திமுகவின் 311-வது தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற வலியுறுத்தி சென்னை எழும்பூரில் உள்ள கல்வி அலுவலகம் அருகே இடைநிலை ஆசிரியர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதி பரபரப்புடன் காணப்பட்டது.

மரம் மனிதனின் உரம்

### தென் மாவட்டங்களுக்கு செல்லும்
# எக்ஸ்பிரஸ் ரயில்களின் வேகம் நாளை முதல் அதிகரிப்பு

சென்னை, டிச. 31-

தென் மாவட்டங்களுக்கு செல்லும் எக்ஸ்பிரஸ் மற்றும் அதிவிரைவு ரயில்களின் வேகம் அதிகரிக்கப்பட உள்ளதாக ரயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது.

தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

தெற்கு ரயில்வேக்கான புதிய கால அட்டவணை வருகிற ஜனவரி 1-ந்தேதி முதல் நடைமுறைக்கு வர உள்ளது. இதில் மெயில், எக்ஸ்பிரஸ் ரயில்களுக்கான நேரம் மாற்றப்பட்டுள்ளது. புதிய பயணிகள் ரயில், ரயில் சேவை நீட்டிப்பு, புதிய நிறுத்தங்கள், ரயிலின் வேகம் அதிகரிப்பு, கூடுதல் பெட்டிகள் இணைப்பு உள்ளிட்ட மாற்றங்கள் அடங்கிய புதிய கால அட்டவணை தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. குறிப்பாக, நடப்பாண்டில் 8 புதிய ரயில்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

4 ரயில்கள் நீட்டிக்கப்பட்டுள்ளது. 8 ரயில்கள் மாற்று நேரத்தில் இயக்கப்பட்டு வருகிறது. 44 எக்ஸ்பிரஸ், பயணிகள் ரயில் எண்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. 102 எக்ஸ்பிரஸ் ரயில்களுக்கு தற்காலிக நிறுத்தம் வழங்கப்பட்டுள்ளது. 22 மெயில், எக்ஸ்பிரஸ் மற்றும் பயணிகள் ரயில்கள் வேகம் அதிகரிக்கப்பட்டுள்ளது. 7 வந்தே பாரத் ரயில்களில் கூடுதலாக 40 பெட்டிகள் இணைத்து இயக்கப்படுகிறது. 46 எக்ஸ்பிரஸ் ரயில், 27 பயணிகள் ரயில்களில் 62 பெட்டிகள் நிரந்தரமாக இணைக்கப்பட்டுள்ளது.

இதேபோல, வருகிற ஜனவரி 1-ந்தேதி முதல் 65 மெயில், எக்ஸ்பிரஸ் மற்றும் அதிவிரைவு ரயில்களின் வேகம் அதிகரிக்கப்பட உள்ளது. மேலும், 14 பயணிகள் ரயில்களின் வேகமும் அதிகரிக்கப்பட உள்ளது. அதன்படி, 5 நிமிடங்கள் முதல் 85 நிமிடங்கள் வரை பயண நேரம் சேமிக்க முடியும். குறிப்பாக, செங்கோட்டை-சென்னை எழும்பூர் பொதிகை எக்ஸ்பிரஸ் ரயில் (12662) வழக்கமான நேரத்தைவிட 20 நிமிடம் முன்னதாகவும், சென்னை எழும்பூர்-குருவாயூர் (16127) 20 நிமிடம் முன்னதாக செல்லும் வகையிலும் வேகம் அதிகரிக்கப் படவுள்ளது.

கொல்லம்-தாம்பரம் எக்ஸ்பிரஸ் ரயில் (வண்டி எண்.16102) 85 நிமிடம் முன்னதாக செல்லும் வகையிலும், கோவை-ராமேசுவரம் ரயில் (16618) 55 நிமிடம் முன்னதாக செல்லும் வகையிலும் வேகம் அதிகரிக்கப்பட உள்ளது.

நாகர்கோவில்-தாம்பரம் எக்ஸ்பிரஸ் ரயில் (20692) 45 நிமிடம் முன்னதாகவும், தூத்துக்குடி-சென்னை எழும்பூர் (12694) முத்துநகர் எக்ஸ்பிரஸ் 30 நிமிடம் முன்னதாகவும், சென்னை எழும்பூர் - செங்கோட்டை பொதிகை எக்ஸ்பிரஸ் 10 நிமிடம் முன்னதாகவும் சென்றடையும் வகையில் வேகம் அதிகரிக்கப்பட உள்ளது. இதேபோல, நெல்லை-செங்கோட்டை பயணிகள் ரயில் 35 நிமிடம் முன்னதாகவும், மதுரை-ராமேசுவரம் பயணிகள் ரயில் 15 நிமிடம் முன்னதாகவும் செல்லும் வகையில் வேகம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் பயணிகளின் பயண நேரம் சேமிக்க முடியும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### தலைவர்கள் சொல்வதை படிங்க....



அரசு ஊழியர் அமைப்புகள் ஜனவரி 6-ம் தேதி முதல் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தைத் தொடங்கவுள்ள நிலையில், அதற்கு முன்பாகவே பழைய ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்தும் அறிவிப்பை தி.மு.க. அரசு வெளியிட வேண்டும். மீதமுள்ள கோரிக்கைகளையும் அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

- அன்புமணி



பல்கலைக் கழக துணை வேந்தர் நியமன மசோதாவை ஜனாதிபதி 3 ஆண்டுகளுக்கு பிறகு திருப்பி அனுப்பியிருக்கும் நிலையில் அடுத்தகட்ட சட்டப்பூர்வ நடவடிக்கையை முதல்வர் பரிசீலிக்க வேண்டும். மேலும் இந்த விவகாரத்தில் தமிழ்க முதல்வர் எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு தமிழக கட்சிகள் அனைத்தும் துணையாக இருக்க வேண்டும்.

- செல்வப்பெருந்தகை



கல்வி நிறுவனங்களை காவிமயமாக்க வேண்டும் என்ற தனது அரசியல் உள்நோக்கத்தை தொடர்ந்து செயல்படுத்திட வேண்டும் என்பதற்காகவே, சென்னை பல்கலைக்கழக மசோதாவிற்கு மத்திய அரசு ஜனாதிபதியின் ஒப்புதலை பெற்றுத் தரவில்லை. கல்வியில் மாநில உரிமைகளை பறிக்கும் மத்திய பா.ஜ.க. அரசுக்கு கண்டனத்தை தெரிவித்து கொள்கிறோம்.

- வீரபாண்டியன்



போதைக்கு அடிமையாவது தனிநபரை மட்டுமல்ல, நாட்டின் எதிர்காலத்தை சீர்குலைக்கும். தமிழக அரசு போதைப் பொருட்கள் புழக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக தண்டனைகளைக் கடுமையாக்குவதுடன், ஆபத்தான போதைப் பொருட்கள் புழக்கத்தில் இருக்கும் பகுதியில் உள்ள காவல் நிலைய அதிகாரிகளும் தண்டனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும்.

- ராமதாஸ்

# களத்தாவூர் கிராமத்தில் அடிப்படை வசதிகள் நிறைவேற்றிய வட்டார வளர்ச்சி அலுவலருக்கு பொதுமக்கள் பாராட்டு



**ராமநாதபுரம், டிச.31-**

ராமநாதபுரம் அருகே சூரங்கோட்டை ஊராட்சிக் குட்பட்ட களத்தாவூர் கிராமத்தில் அடிப்படை வசதிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்த கிராம ஊராட்சிகள் வட்டார வளர்ச்சி அலுவலருக்கு பொதுமக்கள் பாராட்டு நன்றியும் தெரிவித்துள்ளனர். ராமநாதபுரம் அருகே உள்ள சூரங்கோட்டை ஊராட்சிக்குட்பட்டது களத்தாவூர். இந்த ஊரில் கடந்த பல ஆண்டுகளாக அடிப்படை வசதிகளை நிறைவேற்றக் கோரி கிராம மக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்நிலையில் கிராம மக்களுக்கு பயனடையும் வகையில் நமக்கு நாமே திட்டத்தில் பொதுமக்கள் பங்களிப்புடன் ரூ.20 லட்சம் செலவில் கிராமத்தில் சமுதாயக்கூடம் திருமண மண்டபம் கட்டப்பட்டுள்ளது.

இந்த திருமண மண்டபத்தின் மேற்பகுதியில் உயர் அழுத்த மின்கோபுரம் சென்ற நிலையில் திருமண மண்டபத்திற்கு மின் இணைப்பு வழங்குவதில் இடையூறு ஏற்பட்டது. இதன் காரணமாக உயர் அழுத்த மின்கம்பியை மாற்றி மின் இணைப்பு வழங்க மின்வாரியத்தினரிடம் கிராம மக்கள் கோரிக்கை விடுத்தனர். மின் கம்பியை மாற்றியமைக்க அதற்கான தொகையை செலுத்துமாறு மின்வாரியத்தினர் தெரிவித்து விட்டனர். இதனால் சமுதாயக்கூடம் மற்றும் திருமண மண்டபத்திற்கு மின் இணைப்பு கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டது.

இது தவிர மேற்கண்ட களத்தாவூர் கிராமத்தில் மடத்தூரணி பகுதிக்கு தண்ணீர் வரும் வரத்து கால்கள் வழியில் மடை அமைந்துள்ளது. இந்த மடையில் பொருத்தப்பட்டிருந்த குழாய்கள் காணாமல் போய்விட்டது.

இதை தொடர்ந்து தண்ணீரை ஊரணிக்குள் கொண்டு சேர்க்க முடியாத நிலை ஏற்பட்டது. இந்த மடையை சரி செய்து சீரமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். மேலும் களத்தாவூர் கிராமத்தில் உள்ள சாலை குண்டும் குழியுமாக போக்குவரத்துக்கு லாயக்கற்றதாக இருந்தது இது போன்ற பல்வேறு அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்படாத நிலையில் பொதுமக்கள் தொடர் கோரிக்கை விடுத்து வந்தனர். இந்த நிலையில் ராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் கிராம ஊராட்சி வட்டார வளர்ச்சி அலுவலராக சோமசுந்தர் பொறுப்பேற்றபின்னர் களத்தாவூர் கிராம மக்கள் அவரிடம் மேற்கண்ட கோரிக்கைகள் குறித்து விளக்கி கூறினர் இவற்றை கனிவுடன் கேட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் சோமசுந்தர் உடனடியாக மேற்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்ற உத்தரவிட்டார். சமுதாய கூட்டத்திற்கு தேவையான மின் இணைப்பு வழங்க ஏதுவாக மின் கம்பியை மாற்றியமைக்கும் தொகையை ஊராட்சி நிதியிலிருந்து விடுவித்து உத்தரவிட்டுள்ளார். இது தவிர மடத்தூரணிக்கு செல்லும் வரத்து கால்வாயில் அமைக்கப்பட்டுள்ள மதகில் பெரிய சிமெண்ட் குழாய் அமைத்து தண்ணீரை கடத்திச் செல்லவும் உத்தரவிட்டுள்ளார். சூரங்கோட்டை செல்லும் சாலை குண்டும் குழியுமாக உள்ளதால் உடனடியாக மராமத்து செய்ய நடவடிக்கை எடுத்துள்ளார். கிராம மக்களின் கோரிக்கையை ஏற்று அடிப்படை வசதிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்த கிராம ஊராட்சி வட்டார வளர்ச்சி அலுவலர் சோமசுந்தரத்திற்கு களத்தாவூர் கிராம பொதுமக்கள் நேரில் சந்தித்து பாராட்டும் நன்றியும் தெரிவித்தனர்.

# வருடம் முழுவதும் நடமாடும் பல் மருத்துவ பரிசோதனைகள் முகாம்

## பல் மருத்துவர்கள் சங்கம் தீர்மானம்



**திண்டுக்கல், டிச. 31-**

வருடம் முழுவதும் நடமாடும் பல் மருத்துவ பரிசோதனைகள் முகாம் மற்றும் இரண்டு கிராமங்களை தத்தெடுத்து பல் சம்பந்தப்பட்ட அனைத்து நோய்களுக்கும் இலவச சிகிச்சை அளிப்பது என திண்டுக்கல்லில் நடைபெற்ற பல் மருத்துவர்கள் சங்க பொதுக்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்திய பல் மருத்துவ சங்கத்தின் திண்டுக்கல் மாவட்ட கிளையின் வருடாந்திர பொதுக்குழு கூட்டம் திண்டுக்கல் பழனி ரோட்டில் உள்ள விவேரா கிராண்ட் நட்சத்திர விடுதியில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக திண்டுக்கல் அரசு மருத்துவ கல்லூரியின் தலைமை கண்காணிப்பாளர் இருதயியல் மருத்துவர் டாக்டர்.வீரமணி கலந்து கொண்டு உரையாற்றினார்.

மேலும் இந்திய மருத்துவ பல் மருத்துவர்கள் சங்கத்தின் தமிழ்நாட்டின் செயலாளர் டாக்டர்.செந்தாமரை கண்ணன், தேசிய துணை தலைவர் டாக்டர். கோகுல்ராஜ் கவுரவ விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். திண்டுக்கல் மாவட்டத்தில் பல் சுகாதாரத்தில் பின் தங்கிய இரண்டு கிராமங்களை பல் மருத்துவ சங்கத்தின் சார்பாக தத்து எடுத்து அந்த மக்களுக்கு இலவச பல் பரிசோதனைகள் மற்றும் பல் சம்பந்தப்பட்ட அனைத்து சிகிச்சைகளும் இலவசமாக வழங்க சங்கத்தின் சார்பாக முடிவு எடுக்கப்பட்டுள்ளது.மேலும், இந்த வருடம் முழுவதும் நடமாடும் பல் மருத்துவ பரிசோதனைகள் முகாம் திண்டுக்கல் மாவட்டம் முழுவதும் நடத்தவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த விழாவில் திண்டுக்கல் மாவட்டத்தின் சார்பாக டாக்டர்.முகமது இதயதுல்லா மாவட்ட தலைவராகவும், டாக்டர். பெருமாள் செயலாளராகவும் டாக்டர்.மாரிமுத்து பொருளாளராகவும் பதவியேற்று கொண்டனர்.

# நத்தம் வர்த்தகர்கள் சங்க பொதுக்குழு கூட்டம் - 5 தீர்மானங்கள் நிறைவேற்றம்




**நத்தம், டிச, 31-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் தனியார் திருமண மண்டப வளாகத்தில் நத்தம் வர்த்தகர்கள் சங்க ஆண்டு பொதுக்குழு கூட்டம் நடந்தது. இதற்கு சங்க தலைவர் சேக்ஒலி தலைமை தாங்கினார்.செயலாளர் ஜெரால்டு ராஜா, பொருளாளர் அமானுல்லா,சங்க சட்ட ஆலோசகர் சேக் சிக்கந்தர் பாட்ஷா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.துணை தலைவர் செந்தில்ராஜன் வரவேற்றார். கூட்டத்தில் நத்தத்தில் இருந்து சென்னை மற்றும் பெங்களூருவிற்கு அரசு விரைவு பேருந்துகள் இயக்க வேண்டும், சாலையோரங்களில் கடைகளின் முன்பு ஒலிபெருக்கியுடன் வண்டிகடை அமைப்பவர்களை அகற்ற கோரி பேரூராட்சி நிர்வாகத்தை வலியுறுத்துவது உள்பட 5 தீர்மானங்கள் நிறைவேற்றபட்டன. கூட்டத்தில் செயற்குழு உறுப்பினர்கள் அன்புராஜா,அப்பாஸ் ஒலி உள்ளிட்ட செயற்குழு உறுப்பினர்கள், நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

# நத்தத்தில் பா.ஜ.க கண்டன ஆர்ப்பாட்டம்



**நத்தம், டிச. 31-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பாக சட்டமன்ற தொகுதி பாஜக சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. இதற்கு மாவட்ட தலைவர் முத்துராமலிங்கம் தலைமை தாங்கினார். மாநில பிரச்சார பிரிவு தலைவர் பாண்டியராஜன், மாவட்ட தலைவர் அருண், தொகுதி பொறுப்பாளர் சொக்கர்,ஒன்றிய தலைவர்கள் பாலமுருகன், பாக்கியராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் கடந்த சில தினங்களுக்கு முன்பு திமுக நடத்திய ஆர்ப்பாட்டத்திற்கு பணியாளர்களை அனுப்பிய ஊரக வளர்ச்சித்துறை அதிகாரியை கண்டித்தும், தமிழக அரசை கண்டித்தும் கோஷங்கள் எழுப்பபட்டது. ஆர்ப்பாட்டத்தில் பா.ஜ.க மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# அருப்புக்கோட்டையில் அனைத்து வங்கி ஊழியர் கூட்டமைப்பு ஆர்ப்பாட்டம்




**அருப்புக்கோட்டை, டிச. 31-**

அருப்புக்கோட்டையில் அனைத்து வங்கி கூட்டமைப்பு சார்பாக வாரத்தில் 5 நாள் வேலை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆர்ப்பாட்டத்திற்கு வங்கி ஊழியர் சங்க தேசிய கூட்டமைப்பு மாவட்டச் செயலாளர் ரமேஷ் பாபு தலைமையில் அனைத்து வங்கிகள் கூட்டமைப்பு அருப்புக்கோட்டை கிளை தலைவர் கதிர், செயலாளர் ராஜா முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் வங்கி ஊழியர்களுக்கு வாரத்தில் ஐந்து நாட்கள் மட்டுமே வேலை செய்ய ஆணை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் செய்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் ஸ்டேட் பாங்க், இந்தியன் பேங்க் இந்தியன் ஓவர்சீஸ் பேங்க், கனரா பேங்க் யூனியன் பேங்க் உட்பட அனைத்து வங்கி ஊழியர்கள் கூட்டமைப்பு நிர்வாகிகள் வங்கி அலுவலர்கள் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

# ஜேஎஸ்டபிள்யூ எம்ஜி மோட்டார் இந்தியா தனது ஈவி-க்களுக்காக, நீட்டிக்கப்பட்ட உறுதி அளிக்கப்பட்ட திரும்ப வாங்கும் திட்டத்தை அறிவிப்பு

**சென்னை, டிச. 31-**

ஜேஎஸ்டபிள்யூ எம்ஜி மோட்டார் இந்தியா இன்று தனது வாடிக்கையாளர்களுக்கு ஈவி உரிமையாளராகும் அனுபவத்தை எளிமையாகவும் தடையற்றதாகவும் மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட இத்தொழில்துறையின் முதல் முன் முயற்சியைத் தொடங்குவதாக அறிவித்துள்ளது. ஜேஎஸ்டபிள்யூ எம்ஜி மோட்டார் நிறுவனம், ஈவிக்களுக்கான உறுதி அளிக்கப்பட்ட திரும்ப வாங்கும் வசதியை தற்போதுள்ள 3 ஆண்டுகளில் இருந்து 5 ஆண்டுகள் வரை வழங்கும் நாட்டின் முதல் கார் பிராண்டாக மாறியுள்ளது. இந்தப் புதிய, தனித்துவமான திட்டத்தின் மூலம், எம்ஜி ஈவி உரிமையாளர்கள் தாங்கள் தேர்ந்தெடுக்கும் திட்டத்தைப் பொறுத்து 3, 4 அல்லது 5 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு நிலையான மறுவிற்பனை மதிப்பைப் பெறலாம். 3 ஆண்டு கால உரிமையாளர்களுக்கு 60% திரும்ப வாங்கும் மதிப்பை உறுதி செய்யும் எம்ஜி மோட்டாரின் தற்போதைய திட்டத்தின் அடிப்படையில் இது உருவாக்கப்பட்டுள்ளது.

இது எந்தவொரு கடன் அல்லது நிதித் திட்டத்திலிருந்தும் தனித்து இயங்குகிறது. நாட்டிலேயே முதல் முறையாக, வணிகப் பயன்பாட்டிற்கான எம்ஜி இசட்எஸ் ஈவி வாகனங்களின் உரிமையாளர்களும், 3 ஆண்டுகள் வரை பழமையான அல்லது ஆண்டுக்கு 60,000 ரூபாய் வரையிலான மைலேஜ் கொண்ட வாகனங்களுக்கு மறுவிற்பனை மதிப்புப் பலன்களைப் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.

இது குறித்து ஜேஎஸ்டபிள்யூ எம்ஜி மோட்டார் இந்தியாவின் நிர்வாக இயக்குநர் அனுராக் மெஹ்ரோத்ரா கூறுகையில், வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட ஒரு பிராண்டாக, எம்ஜி எப்போதும் பேட்டரி-ஒரு-சேவையாக, ஈவி பேட்டரிகளுக்கான வாழ்நாள் உத்தரவாதம் போன்ற பல முன்முயற்சிகளை அறிமுகப்படுத்தி, ஈவி உரிமையை ஒரு மகிழ்ச்சியான பயண அனுபவமாக மாற்றி வருகிறது என்றார். மேலு் ஜூனோ ஜெனரல் இன்சூரன்ஸின் எம்டி மற்றும் சிஇஓ ஷனாய் கோஷ் கூறுகையில், ஒரு டிஜிட்டல் காப்பீட்டு நிறுவனமாக, இந்த கூட்டாண்மை ஒரு வலுவான, எதிர்காலத்திற்குத் தயாரான ஈவி காப்பீட்டுத் தொகுப்பை உருவாக்கும் எங்கள் தொலைநோக்குப் பார்வையை வலுப்படுத்துகிறது. இந்தத் திட்டத்தின் காப்பீட்டு கூட்டாளரான ஜூனோ ஜெனரல் இன்சூரன்ஸ், நீண்டகால ஈவி உரிமையை எளிதாக்கும் டிஜிட்டல்-சார்ந்த பாதுகாப்பை உருவாக்குவதில் உறுதியாக உள்ள ஒரு நவீன காப்பீட்டு நிறுவனமாகும் என்று கூறினார்.

# இதே தருணம் சரியான நேரம் கனவுகளை கடக்கும் அனுபவம், விசிட் மலேசியா 2026

**சென்னை, டிச 31-**

டூரிசம் மலேசியா சென்னை 2025-ஆம் ஆண்டு தென் இந்தியாவில் முன்னணியில் நிறைவு செய்து, வரவிருக்கும் விசிட் மலேசியா ஆண்டு 2026 (விஎம்ஓய் 2026)-க்கு உற்சாகமாக தயாராகியுள்ளது. கடந்த ஆண்டு 234 முக்கிய நடவடிக்கைகள், 125 வணிகக் கலந்துரையாடல்கள், 42 ஊக்குவிப்பு பிரச்சாரங்கள், 31 ஊடக மற்றும் பொது உறவு திட்டங்கள் மற்றும் 36 பிராண்டு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மூலம் மலேசியாவின் சுற்றுலா ஈர்ப்பு இந்திய சந்தையில் மேலும் வலுப்படுத்துவது.148 நேரடி விமானங்கள் மற்றும் வாரந்தோறும் 25,668 இருக்கைகள் மூலம் மலேசியா இந்திய பயணிகளுக்கு எளிதாக அணுகக்கூடிய தலமாக மாறியுள்ளது.

இது குறித்து டூரிசம் மலேசியா சென்னை இயக்குநர் ஹிஷாமுடின் முஸ்தபா கூறுகையில், எங்களின் இந்திய சந்தை அர்ப்பணிப்பு தளர்வற்ற தாக உள்ளது. 2026-ஆம் ஆண்டில் 20 லட்சம் இந்திய பயணிகளை வரவேற்க குறிக்கோள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார். பி2பிமுயற்சிகள், சைக்கிள் நிகழ்வுகள், நுகர்வோர் தள்ளுபடிகள், ரோட்ஷோ க்கள் மற்றும் டிஜிட்டல் பிரச்சாரங்கள் போன்ற பல நடவடிக்கைகள் மூலம் விஎம்ஓய் 2026 சுற்றும் ஆற்றல் அதிகரித்து வருகிறது. வலுவான கூட்டுறவு மற்றும் தொடர்ச்சியான உற்சாகத்துடன், சுற்றுலா மலேசியா சென்னை 2026-ஆம் ஆண்டை வெற்றிகரமாகவும் தாக்கமுள்ள அனுபவமாகவும் வழங்கத் தயாராக உள்ளது.

# திருச்சுழி பகுதிகளில் அரசின் திட்டங்களை பயனாளிகளுக்கு கலெக்டர் சுகபுத்ரா வழங்கினார்



**விருதுநகர், டிச. 31-**

திருச்சுழி வட்டாரப்பகுதிகளில் அரசின் பல்வேறுத் துறைகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் நலத்திட்டங்களை பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் சுகபுத்ரா வழங்கினார்.

அதன்படி, திருச்சுழி வட்டம் குலசேகரநல்லூர் ஊராட்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் இணைந்து மகளிர் சுய உதவி குழுக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் ரூ.10 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள மசாலா தயாரிப்பு தொகுப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் சுகபுத்ரா, திறந்து வைத்து பார்வையிட்டார். தொடர்ந்து, திருச்சுழி வட்டம் குலசேகரநல்லூர் ஊராட்சியில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் உற்பத்தி பொருட்களை கொள்முதல் மற்றும் விற்பனை செய்ய ஏதுவாக மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு வட்டி மானியத்தில் வாங்கப்பட்ட சரக்கு வாகனத்தினையும் திருச்சுழி வட்டம் குலசேகர நல்லூர் ஊராட்சியில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து திருச்சுழி ஊராட்சி ஒன்றியம், சென்னிலைகுடி ஊராட்சியில் தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரம் 2023-2024-ம் ஆண்டிற்கான திட்டத்தின் கீழ் ரூ.7.91 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள 100 வீடுகளை தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு குலுக்கல் மூலம் ஒதுக்கீடு செய்யும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் துவக்கி வைத்து, புதிய வீடுகளை பார்வையிட்டார்.

இந்நிகழ்வில், திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கேசவதாசன், திட்ட இயக்குநர் ஜார்ஜ் ஆண்டனி மைக்கேல், அருப்புக்கோட்டை கோட்டாட்சியர் மாரிமுத்து, வட்டாட்சியர், அரசு அலுவலர்கள் மற்றும் பயனாளிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சேவுகம்பட்டி பேரூராட்சி மன்ற கூட்டம்: பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றம்



**வத்தலகுண்டு, டிச. 31-**

சேவுகம்பட்டி பேரூராட்சி மன்ற கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு ஒன்றியம் சேவுகம்பட்டி பேரூராட்சி மன்ற கூட்டம் எம். வாடிப்பட்டி பேரூராட்சி மன்ற வளாகத்தில் புதிதாக கட்டப்பட்ட கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இக்கூட் டத்திற்கு பேரூராட்சி மன்ற தலைவர் வனிதா தங்கராஜன் தலைமை தாங்கினார். துணைத்தலைவர் தெய்வராணி விஜயன் முன்னிலை வகித்தார். பேரூராட்சி செயல் அலுவலர் ரமேஷ் பாபு வரவேற்றார்.

இக்கூட்டத்தில், பொது நிதியின் கீழ் நாகலாபுரம், சுப்பிரமணியபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள தெருக் கள் மற்றும் மெயின்ரோட் டில் வடிகால் அமைத்தல், பேரூராட்சி மூலம் வீடு களுக்கு வழங்கப்படும் குடிநீரை பொதுமக்கள் வீணாக்காமல் தங்களது இணைப்புகளில் உள்ள பழுதடைந்த குழாய்களை சரிசெய்து பயன்படுத்த அறிவுறுத்தல், பேரூராட் சியில்உள்ளஅனைத்து வார்டுகளுக்கும் குடிநீர் வழங்க பயன்படும் ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் கிணறுகளில்தூய்மையான தண்ணீர் கிடைக்கும் வண்ணம் அதனை பராமரித் தல் உள்ளிட்ட தீர்மானங் கள் நிறைவேற்றப்பட்டன. இக்கூட்டத்தில் கவுன்சிலர் கள் கலந்து கொண்டனர். முடிவில் இளநிலை உதவியாளர் அம்மமுத்து நன்றி கூறினார்.

# கொட்டாம்பட்டி: பெரியாறு பாசன கால்வாய் நீட்டிப்பு ஆலோசனை



**மேலூர், டிச.31-**

கொட் டாம் பட் டியை அடுத்த கேசம்பட்டியில், பெரியாறு பாசன கால் வாயை நீட்டிக்க வேண்டும் என் பது குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில் விவசாயிகள் பலரும் பங்கேற்றனர். மேலூர் அருகே கொட்டாம்பட்டி ஒன்றியத்தில் உள்ள 16 ஊராட்சிகளில் முல்லைப் பெரியாறு நீர்ப்பாசன கால் வாயை நீட்டிப்பதற்கான விவசாயிகளின் ஆலோசனை கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கூட்டத்தில் அரசியல் கட்சிகளிடம் இக்கோரிக்கையை கொண்டு செல் வது, ஜனவரி 26 ல் குடியரசு தினத்தை முன்னிட்டு நடைபெறும் கிராம சபைக் கூட்டத்தில், 16 ஊராட்சிகளில் இது குறித்து சிறப்பு தீர்மானம் நிறைவேற்றுவது என முடிவு செய்யப்பட்டது. இக்கூட்டத்தில் அப்பகுதியை சேர்ந்த விவசாயிகள், பொதுமக்கள் பங்கேற்றனர்.

# சிலுக்குவார்பட்டியில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம்



**வத்தலகுண்டு,டிச.31-**

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையை அடுத்த சிலுக்குவார்பட்டியில் "நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம் நடைபெற்றது" முகாமிற்கு வட்டார மருத்துவ அலுவலர் வினோத் தலைமை வகித்தார்,மாவட்ட மருத்துவ அலுவலர் சிவக்குமார் முன்னிலை வகித்தார், வட்டார சுகாதார மேற்பார்வையாளர் சக்திவேல் வரவேற்றார்,முகாமிற்கு சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட நிலக்கோட்டை வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் வழக்கறிஞர் சௌந்தரபாண்டியன் முகாமைதொடங்கிவைத்தார்,முகாமில்இரத்தஅழுத்தம்,உயர்இரத்தஅழுத்தம், கண்காது, தலை,ECG,ஸ்கேன்,எக்சரே உட்பட முழு உடல் பரிசோதனை செய்யப்பட்டது. மேலும் இந்த முகாமில் சுகாதார ஆய்வாளர்கள் பாண்டி,மாதவன் ஊராட்சி செயலாளர் கணேசன் மற்றும்திமுகநிர்வாகிகள்அழகேசன்,ஆரோக்கியம், செம்பர்சுரேஷ்,பெனிட்,பதினெட்டாம்படி,ஜேசிபிமுருகன்,தங்கவேல்,சேவியர்உப்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்,முகாமில் சிலுக்குவார்பட்டி,கரியாம்பட்டி, நடுப்பட்டி, மன்னவராதி, பழையசிலுக்குவார்பட்டி, பள்ளப்பட்டி, சங்கராபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தா நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டு பயன் அடைந்தனர். முகாமில் முடிவில் சிலுக்குவார் பட்டி ஊராட்சி மன்ற செயலர் கணேசன் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.

## ராமநாதபுரம் நகரசபை நிர்வாக சீர்கேட்டை கண்டித்து

# அ.தி.மு.க சார்பில் ஆர்ப்பாட்டம்



**ராமநாதபுரம், டிச.31-**

ராமநாதபுரம் நகராட்சி நிர்வாகம் சீர்கேட்டை கண்டித்து அதிமுக சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ராமநாதபுரம் நகராட்சி பகுதி மக்களின் அடிப்படை வசதிகளை நிறைவேற்றத் தவறிய நகராட்சி சீர்கேட்டை கண்டித்து

ராமநாதபுரம் மாவட்ட அதிமுக சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

அதிமுக அமைப்பு செயலர் ராஜன் செல்லப்பா எம்எல்ஏ தலைமை வகித்தார். மாவட்ட அதிமுக செயலர் முனியசாமி முன்னிலை வகித்தார். தலைமைக்கழக பேச்சாளர் ஜமால் வரவேற்றார்.

குடிநீர், தெரு விளக்கு, சாலை வசதி, சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படைத் வசதிகளை உடனடியாக நிறைவேற்றக்கோரி கோஷமிட்டனர். இதில் முன்னாள் அமைச்சர் டாக்டர் மணிகண்டன், ராமநாதபுரம் நகர் செயலர் பால்பாண்டியன், எம்ஜிஆர் மன்ற இணைச்செயலர் ரத்தினம், முன்னாள் எம்எல்ஏ சதன் பிரபாகர், முன்னாள் மாவட்ட செயலர்கள் முனியசாமி, ஆனிமுத்து ஆகியோர் பேசினர். மாவட்ட அவைத் தலைவர் சாமிநாதன், முன்னாள் எம்எல்ஏக்கள் மலேசியா பாண்டி, முத்தையா, மாநில துணை செயலர்கள், சேது பாலசிங்கம் (ஜெ.பேரவை) செந்தில் குமார் (மாணவரணி), சண்முக பாண்டியன் (விவசாய பிரிவு), ரத்தினம் (போக்குவரத்து பிரிவு). நகர் துணை செயலர் ஆரிப் ராஜா, மருத்துவ அணி மாவட்ட செயலர் டாக்டர் இளையராஜா, தகவல் தொழில்நுட்ப பிரிவு, விருதுநகர் மண்டல செயலர் சரவணகுமார், ஒன்றிய செயலர்கள் மருதுபாண்டியன் : ஜானகி ராமன், லோகிதாஸ், எம்ஜிஆர் இளைஞரணி மாவட்ட இணை செயலர் ஜாகீர் உசேன், மண்டபம் ஒன்றிய ஜெ.பேரவை பொருளாளர் ஞானம், அண்ணா தொழிற் சங்க நிர்வாகிகள் மகாதேவன், முத்துராமன், மகளிரணி மாவட்ட செயலர், ஜெய்லானி சீனிக்கட்டி, மண்டபம் ஒன்றிய மகளிரணி இணை செயலர் விஜயலட்சுமி, முன்னாள் நகர் செயலர் வரதன் உள்பட பலர் பங்கேற்றனர்.

# ராமநாதபுரத்தில் ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்கத்தினர் உண்ணாவிரதம்



**ராமநாதபுரம், டிச.31-**

ராமநாதபுரத்தில் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கத்தின் சார்பில் உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பெயரை மாற்றியதுடன் திட்டத்திற்கான நிதி வெகுவாக குறைத்த மத்திய அரசின் மக்கள் விரோத போக்கை கண்டித்தும், புதிய சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தி

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர வளாகத்தில்

தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கம் சார்பில் உண்ணாவிரதப் போராட்டம் இன்று நடந்தது. தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்க மாவட்டத்தலைவர் பரமசிவம் தலைமை வகித்தார். மாவட்ட செயலர் காசிநாத துரை, பொருளாளர் அருண் முன்னிலை வகித்தனர். மாநில துணைத்தலைவர் சோமசுந்தர தொடங்கி வைத்தார். அரசு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் விஜயா மலிங்கம், மாவட்ட செயலர் அப்துல் நஜ்முதீன், ஒய்வூதியர் கூட்டமைப்பு தலைவர் முருகேசன், நிர்வாகி விஜயராகவன், தமிழ்நாடு ஊரக வளர்ச்சி அலுவலர் சங்க மாவட்ட துணைத் தலைவர் சிவனு உள்பட பலர் கோரிக்கையை வலியுறுத்தி பேசினர்.

# ஆரோக்கியத்துக்கு நன்மைகள் அளிக்கும் அயோடின் உப்பு

**திருச்சி, டிச.31-**

அயோடின் உப்புக்கு பல அம்சங்கள் உள்ளன. அயோடின் உப்பு என்பது நமது சாப்பாட்டின் ருசியை மட்டும் அதிகரிப்பதாக இல்லாமல் நமது ஆரோக்கியத்தையும் பலவழிகளில் மேம்படுத்துகிறது. பல ஆய்வுகளின் படி உலக அளவில் பொது ஆரோக்கிய நலன் தொடர்பில் அயோடின் குறைபாட்டு சீர்குலைவு மற்றும் அதன் மோசமான பின் விளைவுகளைக் குறைக்க பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அயோடின் குறைபாட்டு சீர்குலைவைத் தீர்ப்பதில் இந்தியா பெரியளவில் சாதித்துள்ளது. இந்தியாவின் அயோடி சர்வே 2018, 2019 -ன் அடிப்படையில் 76.3% வீடுகளில் அயோடின் உப்பு போதுமான அளவு எடுத்துக் கொள்ளப்படுகிறது. இந்த ஆய்வு முடிவுகளின் வழியாக அயோடின் உப்பு பற்றிய போதிய விழிப்புணர்வு இல்லை என்பது தெரியவந்துள்ளது. அயோடின் கலந்த உப்பின் ஆரோக்கிய பலன்கள் பற்றி 22.4% பேர் தான் சரியான தெளிவைக் கொண்டுள்ளனர். உப்பில் சரியான அளவு அயோடினைச் சேர்த்துக் கொள்வது முன்க முத்து கழலை நோயைத் தடுக்குமென்று 61.4% பேர் தான் அறிந்து வைத்துள்ளனர். அயோடின் உப்பானது, அயோடின் குறைபாட்டு சீர்குலைவை தடுப்பதற்கு உதவுகிறது. ஆரோக்கியமான கர்ப்பத்துக்கு உதவுகிறது. குழந்தைகளின் மூளை வளர்ச்சியை அதிகரிக்கிறது மற்றும் ஒரு நபரின் பொதுவான ஆரோக்கியத்துக்கு உதவுகிறது.

# இந்தியப் பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கும் 'கஜ்' கிரெடிட் கார்டை வெளியிட்டது ஐடிஎஃப்சி

**சென்னை, டிச.31-**

ஐடிஎஃப்சி ஃபர்ஸ்ட் பேங்க், கஜ் (சமஸ்கிருதத்தில் கஜா என்று உச்சரிக்கப்படுகிறது) கிரெடிட் கார்டு அறிமுகப்படுத்தப்படுவதை அறிவித்துள்ளது. இது வங்கியுடன் நல்ல உறவு வைத்துள்ள உயர்-நிகர-வருவாய் கொண்ட தனிநபர்களுக்காக (HNI) வடிவமைக்கப்பட்ட அழைப்பிதழ் -பேரில் -கிடைக்கும் பிரீமியம்வகை உலோக கிரெடிட் கார்டு ஆகும். கஜ் கிரெடிட் கார்டு, வங்கியின் பிரீமியம் மெட்டல் கிரெடிட் கார்டு தேர்ந்தெடுக்கப்பட்ட தொடரான அஸ்வ-மயூரா-கஜ்: மூன்று சொற்களின் இணைப்பின் உச்சத்தை பிரதிபலிக்கிறது.

எங்கள் வடிவமைப்பு: கஜ் கிரெடிட் கார்டு பொதுவான உலகளாவிய அழகியலைவிட மேம்பட்டதாக உள்ளது. "உலோகத்தில் வடிவமைக்கப்பட்ட" கையொப்ப இரட்டை-யானை உருவம், உலக அரங்கில் இந்தியாவின் சிறப்பை மௌனமாக எடுத்துரைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு கைவினைஞரின் தலைசிறந்த படைப்பாகும்.

ஐடிஎஃப்சி ஃபர்ஸ்ட் வங்கியின் கிரெடிட் கார்டுகள், ஃபாஸ்டாக் & லாயல்டி தலைவர் ஷிரிஷ் பண்டாரி கூறுகையில், "கஜ் கிரெடிட் கார்டு இந்திய பாரம்பரியம் மற்றும் அதன் சாதனையாளர்கள் மீதான நமது ஆழ்ந்த மரியாதையை பிரதிபலிக்கிறது. இந்த கார்டை அனைத்து வகையிலும் முழுமையான ஒன்றாக வடிவமைத்துள்ளோம் – சிறப்பம்சங்களை உயிர்ப்பூட்டும் இந்திய வடிவமைப்புடன் ஒருங்கிணைத்திருக்கிறோம். எங்கள் அஸ்வ-மயூரா-கஜ்: மூன்று சொற்களின் தொகுப்பின் உச்சமாக உள்ளது. இது நவீன இந்திய சாதனையாளர்களின் திறமையைக்கும் வலிமைக்கும் மரியாதை செலுத்துகிறது."

# மார்கழியில் புதிய அனுபவம்: ஏகம் அநேகம் கதைகள், நடனம், கலையில் சங்கமம்

**சென்னை, டிச.31-**

சென்னையின் மார்கழி பருவத்தில்உஷாராணியின் கதை நெசவாளர்கள்புதிய அனுபவமாக ஏகம் அநேகம் நிகழ்ச்சியை முன்னெடுக்கிறது. இது பாரம்பரிய கதைகள், நடனம் மற்றும் கலை வடிவங்களை ஒருங்கிணைத்து, பார்வையாளர்களை ஒரு விதியமான உலகில் அழைக்கும் முயற்சியாகும்.ம கிதா ராவில்லா கதைகள் புதிய பரிமாணங்களை கொண்டுருகிறெர். பெண்கள் சின்னங்கள் அல்ல, சிந்தனையாளர் களாகவும், தெய்வங்கள் தொலைந்த ஞகான்கள் அல்ல, ஒழுங்கு மிக்க முறையில் மோதும் நெறிமுறை களாகவும் காட்சி பெறுகின்றனர்.

இதனால் பாரம்பரிய கதைகள் சமகால பார்வையில் புதிய அர்த்தத்தை பெறுகின்றன.ஆர்யா கிரியின் பரதநாட்டியம் அபிநயத்தின் மூலம் கதை உலகிற்கு நடனத்தில் பிரவேசிக்கச் செய்யும். ஏகம் அநேகம் நிகழ்ச்சி பாரம்பரியத்தின் மதிப்பையும், சமகால கற்பனை உணர்வையும் ஒருங்கிணைத்து, மார்கழி பருவத்தில் மன்னிப்பு அளிக்கும் ஒரு சிந்தனை பூர்வ அனுபவமாக இருக்கும்.

Printed Published and Owned
by S.Manimaran,
Printed at Manimaran
Printers at 9, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
RNI Regn. No.61494/94

# கள்ளிக்குடி மேம்பால பகுதியில் நடைபாதை, கழிவுநீர் வடிகால் வசதி செய்திட வேண்டும்

## ப.மாணிக்கம் தாகூர் எம்.பி கோரிக்கை



**திருமங்கலம்,டிச.31-**

திருமங்கலம் தொகுதி கள்ளிக்குடி மேம்பால பகுதியில் நடைபாதை - கழிவு நீர் வடிகால் வசதி செய்திட வேண்டும் என விருதுநகர் எம்.பி ப.மாணிக்கம் தாகூர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக மத்திய நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்கரிக்கு, மாணிக்கம் தாகூர் எம்.பி எழுதியுள்ள கடிதத்தில், திருமங்கலம் தொகுதி கள்ளிக்குடி சந்திப்புக்கு அருகில் உள்ள மருத்துவமனை மற்றும் உள்ளூர் குடியிருப்புகளை இணைக்கும் வகையில், ஒரு பாதசாரி நடைபாதை மற்றும் சாக்கடை வடிகால் வசதி ஆகியவற்றின் அவசியத்தை உங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.தற்போது கள்ளிக்குடி சந்திப்பில் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் சுமார் ரூ.29 கோடி மதிப்பீட்டில் வாகனங்களுக்கான மேம்பாலம் மற்றும் கீழ்ப்பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இருப்பினும், இப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் மற்றும் நோயாளிகளுக்கு மிகவும் அவசியமான நடைபாதை வசதி இத்திட்டத்தில் சேர்க்கப்பட வில்லை.தற்போது நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகளோடு சேர்த்து, கூடுதலாக ஒரு பாதசாரி நடைபாதை மற்றும் முறையான வடிகால் வசதியை ஏற்படுத்தினால், பொதுமக்கள் சிரமமின்றி மருத்துவமனையைச் சென்றடைய ஏதுவாக இருக்கும். இதற்குத் தேவையான கூடுதல் நிதி சுமார் ரூ.3 கோடியை ஒதுக்கீடு செய்து, இத்திட்டத்தை செயல்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும்

பொதுமக்களின் நலன் கருதி, இந்த கோரிக்கையை அவசரகாலத் தேவையாகக் கருதி பரிசீலிக்க வேண்டுகிறேன். என்று தெரிவித்துள்ளார்.

# பட்டிவீரன்பட்டி பேரூராட்சி மாதாந்திர கூட்டம்



**வத்தலக்குண்டு, டிச.31-**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு ஒன்றியம் பட்டிவீரன்பட்டி பேரூராட்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கு பேரூராட்சித் மன்றத் தலைவர் சியாமளா தலைமை தாங்கினார். துணைத்தலைவர் கல்பனாதேவி அருண்குமார் முன்னிலை வகித்தார். செயல் அலுவலர் கோபிநாத் வரவேற்றார்.

இக்கூட்டத்தில் பட்டிவீரன்பட்டியில் தமிழ்நாடு அரசு சார்பில், சிறந்த சமூக சீர்திருத்தவாதியும், சுயமரியாதை இயக்கம் தொடங்குவதற்கு ஆதரவாக இருந்தவரும், ஒடுக்கப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்காக பாடுபட்ட டபிள்யூ.பி.ஏ.

சௌந்திரபாண்டியனாருக்கு மணிமண்டபம் கட்டப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டசபையில் அறிவித்திருந்தார். அதன்படி மாவட்ட ஆட்சித்தலைவர் பட்டிவீரன்பட்டியில் மணிமண்டபம் கட்டுவதற்கான இடத்தை தேர்வு செய்து தர அறிவுறுத்தியுள்ளார். இந்த மணிமண்டபம் வருவதற்கு பரிந்துரை செய்த ஊரகவளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி மற்றும் பழனி சட்டமன்ற உறுப்பினர் இ.பெ. செந்தில்குமார் ஆகியோருக்கு நன்றி தெரிவித்தல்,

2வது வார்டு கவுண்டர் தெருவில் ரூ.12லட்சம் மதிப்பீட்டில்பேவர்பிளாக் சாலை அமைத்தல், பேரூராட்சி அருகே உள்ள சமுதாய கூடம் அருகாமையில் ரூ.12.50 லட்சம் மதிப்பீட்டில் உணவு அருந்துமிடம் மற்றும் மராமத்து பணி மேற்கொள்ளுதல் உள்ளிட்ட 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முடிவில் இளநிலை உதவியாளர் ஆனந்த் நன்றி கூறினார்.

**அருப்புக்கோட்டை**
**சப் கோர்ட்டு**
**O.S.No19 /2025**
சின்னத்தாய் --- வாதி
-எதிர்-
ராமமூர்த்தி
S/o லேட். சங்கரலிங்கநாடார்
12, நாகலிங்கநாடார்தெரு
அருப்புக்கோட்டை டவுண்
-9ம்பிரதிவாதி
நாகரத்தினம், W/o ராமமூர்த்தி
ஷை விலாசம் -10ம்பிரதிவாதி
குணசேகரன்
S/o எம். காந்தி
48,அகமதுநகர் 3வது தெரு,
விருதுநகர் டவுண்
-12ம்பிரதிவாதி
M/s M.M. சிலிண்டர்ஸ்(P) Ltd Director
30 /21தேவ்அபார்ட்மெண்ட் ,
முதல்மெயின்ரோடு,
காந்திநகர், அடையாறு,
சென்னை-20, -13ம் பிரதிவாதி
ராயல்விஷன் கேர்மார்க்கெட்டிங் &சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் ,
3வது குறுக்குத்தெரு,
வானமலைநகர்,
மதுரை -625 010,
-14ம் பிரதிவாதி
OGUN STEEL ROLLING MILLS PRIVATE LIMITED
17/50 D.P.F. Street
பாப்பநாயக்கன்பாளையம்,
கோயம்புத்தூர்- 15ம்பிரதிவாதி

மேற்படிநிர் வாதி உங்கள் மீது பாகப்பிரிவினை கோரி ஷை கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்துள்ளதில் ஷை நிரில் 9,10, 12 முதல் 15 வரை பிரதிவாதிகளாகிய நீங்கள் 12-01-2026ம் தேதி காலை 10 மணிக்கு ஷை கோர்ட்டில் ஆஜராக வாய்தா ஏற்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் உங்களுக்கு ஆட்சேபணை எதுவுமிருந்தால் மேற்படி நீதிமன்றத்தில் ஷை வாய்தா தேதியன்று நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தெரிவித்துக்கொள்ளலாம். தவறினால்மேற்படி நீதிமன்றத்தில் உங்கள் மீது ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது.

P.THERI RAJAN
B.A.,B.L.,
Advocate,
307A, MADURAI ROAD,
ARUPPUKKOTTAI
-626 101

**மாண்புமிகு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்.**
**திருமங்கலம்.**
ந.க.எண்.2551/2025/தே
கருணாகரன், த/பெ.குருசாமி
1/27,பொம்மி அம்மன் கோவில் தெரு,
ம.போத்தநதி கிராமம்
கள்ளிக்குடி வட்டம்
மதுரை மாவட்டம்.
------- மனுதாரர்
--- எதிர் ---
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்
திருமங்கலம், மதுரை மாவட்டம்.
--------------- எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாரராகிய நான்,எனது தகப்பனார் குருசாமி, த/பெ.திருமால் என்பவர் கடந்த 14.02.1969-ம் தேதி கள்ளிக்குடி வட்டம்,எம்.போத்தநதி கிராமத்தில் உள்ள வீட்டில் வைத்து இறந்ததை பதிவு செய்து உத்தரவிட வேண்டி திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன்.அம்மனு மீதான விசாரணைக்கான வாய்தா வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திருமங்கலம் முன்பாக நடைபெறுகிறது.இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30தினங்களுக்குள் காலை 11.00மணிக்கு மேற்படி கனம் திருமங்கலம் உட்கோட்ட நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.
மனுதாரர்
கருணாகரன்
ம.போத்தநதி கிராமம்.
கள்ளிக்குடி வட்டம்.

**மாண்புமிகு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்.**
**உசிலம்பட்டி.**
ஓ.மு.எண்:4481/2025/ஆ3
ச.கணேசன், த/பெ.சண்முகவேல்
கதவுஎண்.15-7-15B,காமராஜர் தெரு
பேரையூர் டவுன், பேரையூர் வட்டம்
மதுரை மாவட்டம்.
------ மனுதாரர்
--- எதிர் ---
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்
உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.
------ எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாரராகிய நான், எனது தாயார் குருவம்மாள்,க/பெ.சண்முகவேல் என்பவர் கடந்த 27.01.2012-ம் தேதி மதுரை மாவட்டம்,பேரையூர் டவுனில் உள்ள எனது வீட்டில் வைத்து இறந்ததை பதிவு செய்து உத்தரவிட வேண்டி உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீதான விசாரணைக்கான வாய்தா வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், உசிலம்பட்டி முன்பாக நடைபெறுகிறது.இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30தினங்களுக்குள் காலை 11.00மணிக்கு மேற்படி கனம் உட்கோட்ட நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.
மனுதாரர்
ச.கணேசன்
பேரையூர் டவுன்.

# சட்டமன்ற தேர்தலில் தி.மு.க.வை வீழ்த்த எடப்பாடியார் தலைமையில் ஒத்த கருத்துள்ள அனைவரும் வரவேண்டும்

## எதிர்க்கட்சி துணை தலைவர் ஆர்.பி.உதயகுமார் பேட்டி



**மதுரை, டிச.31-**

மதுரை லட்சுமி சுந்தரம் ஹாலில் உலக நன்மைக்காக அதிருத்ர மகா யாகம் நடைபெற்றது இதில் பங்கேற்ற சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி. உதயகுமார் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது .

உலக நன்மைக்காக மக்கள் நல்வாழ்வுக்காக அதிருத்ர மகாயாகம் தற்போது 31 வது ஆண்டாக நடைபெற்று வருகிறது. இங்கே வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் எடப்பாடியார் வெற்றி பெற வேண்டும் என்று நான் பிரார்த்தனை செய்தேன்.

வருகின்ற ஜனவரி 20-ம் தேதி ஆளுநர் உரையுடன் 2026 சட்டமன்ற முதல் கூட்டத்தொடர் நடைபெறுகிறது. இதனை தொடர்ந்து 2026 ஆண்டில் இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்யப்படுவதாக கூறுகிறார்கள். தி.மு.க. அரசு இடைக்கால பட்ஜெட் தான் தாக்கல் செய்ய முடியும் அதனைத் தொடர்ந்து தேர்தல் முடிந்த பின்பு

2026-2027 நிதிநிலை அறிக்கையில் அனைத்தையும் எடப்பாடியார் தான் சமர்ப்பிப்பார்.

அ.தி.மு.க. தவிர வேறு யாரும், க்கள் விரோத தி.மு.க. அரசின் மீது கண்டன குரல் எழுப்பவில்லை. இன்றைக்கு மின் கட்டண உயர்வு, சொத்துவரி உயர்வு, பத்திரப்பதிவுத்துறை கட்டணம் உயர்வு, குப்பை வரி உயர்வு, குடிநீர் வரி உயர்வு, கட்டுமான பொருட்கள் விலை, உயர்வு காய்கறி விலை உயர்வு, அதே போல சட்ட ஒழுங்கு கேள்விக்குறியாகி உள்ளது. பாலியல் வன்கொடுமையால் தமிழகம் தலைகுனிந்து உள்ளது. போதை பொருள் வீட்டு வாசலில் வரும் நிலையில் உள்ளது. கடனில் தமிழகம் முதலில் உள்ளது. இதை சுட்டிக்காட்டி எடப்பாடியார் தினம் தினம் அறிக்கை கொடுத்து வருகிறார் .

இன்றைக்கு கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி உள்ளோம் என்று முதல்வர் சவால் விடுகிறார். இன்றைக்கு எடப்பாடியார் தொடர்ந்து விமர்சனம் செய்து வருவதால் முதல்வர் ஸ்டாலினுக்கு தூக்கம் வரவில்லை .இன்றைக்கு தேர்தல் களத்தில் அ.தி.மு.க.தான் முந்தி வருகிறது இதனால் ஸ்டாலினுக்கு பயம், அச்சம் இவற்றால் சவால் விடுகிறார்

வருகின்ற சட்டமன்ற தேர்தலில் போலீஸ், அதிகாரங்கள், பண பலம் இவற்றை வைத்து தேர்தலில் வென்று விடலாம் என்று நினைக்கிறார். நிச்சயம் மக்கள் தீர்ப்பு மகேசன தீர்ப்பு என்பது போல மக்கள் சரியான பாடத்தை தி.மு.க.வுக்கு புகட்டுவார்கள்.

இன்றைக்கு துறைதோறும் சாதனைகள் இல்லை, துறைதோறும் வேதனைகள் தான் உள்ளது என்று எடப்பாடியார் தக்க பதிலடி கொடுத்துள்ளார்.

எடப்பாடியார் ஆட்சியில் ஒரே ஆண்டில் 11 மருத்துவ கல்லூரிகள், 6 புதிய மாவட்டங்கள், 2000 அம்மா மினி கிளினிக், காவேரிக்கு நிரந்தர தீர்வு, குடிமராமத் திட்டம், நதிநீர் இணைப்பு திட்டம், 53 லட்சம் மாணவர்களுக்கு மடிக்கணினி, 11.50 லட்சம் பெண்களுக்கு தாலிக்கு தங்கம் திட்டம், கிராமப்புறம் பெண்களுக்கு கறவை மாடுகள் திட்டம், அம்மா உணவகம், வேளாண் துறைகளில் 5 முறை க்ரிஷ் கர்மா விருது, உள்ளாட்சியில் மத்திய அரசின் 125 விருதுகளை பெற்றது. இதற்கெல்லாம் மேலே மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் தூய்மையான கோவிலாக விருதினை பெற்று தந்தது எடப்பாடியார் தலைமையிலான அம்மாவின் அரசாகும்.

ஆனால் இன்றைக்கு மீனாட்சி கோவிலில் கழிவு நீரை மிதித்து தான் சுற்றிவரும் ஒரு நிலை உள்ளது. தூய்மையான ,கோயில் நகராக இருந்த மதுரை இன்றைக்கு குப்பைகள் நகராக மாறிவிட்டது தமிழகம் முழுவதும் குப்பை நாடாக மாறி தலை குனிந்து உள்ளது.

இன்றைக்கு முதல்வர் ஸ்டாலின் தேர்தல் ஜுரத்தில் உள்ளார். அதனால் இன்றைக்கு கூட பொங்கல் பண்டிகை பரிசுகள் அறிவிப்பார். கடந்த ஆண்டில் தேர்தலில் இல்லை அதனால் பொங்கல் பரிசு வழங்கவில்லை.

4 ஆண்டுகள் மடிக்கணித் திட்டம் வழங்கவில்லை தற்போது தேர்தல் ஜுரத்தால் மடிக்கணினி என்று அறிவிக்கிறார். அதேபோல தேர்தல் உழவர் உதவி மையம் என்று அறிவிக்கிறார். தற்போது ஸ்டாலின் அறிவிக்கும் திட்டங்கள் மக்களுக்கு பயனளிக்கும் வகையில் திட்டங்கள் அல்ல? தேர்தல் ஜுரத்தால் இதுபோன்ற மருந்துகள் மூலம் தப்பித்துக் கொள்ள நினைக்கிறார்.

ஸ்டாலின் அறிவிப்பு திட்டங்கள் மக்களுக்கு எங்கே கொண்டு சேர்ப்பது என்று கூட தெரியவில்லை?

இன்றைக்கு எடப்பாடியார் சாதனைகள் மக்கள் மனதில் நிறைந்து இருக்கிறார். அம்மாவிற்கு மறைவிற்கு பின் எதிரிகளால் இந்த இயக்கம் கேள்விக்குறியாகும் நிலையில் இருந்த பொழுது, நெஞ்சுரத்துடன் நெருப்பாற்றில் நீந்தி இந்த இயக்கத்தை காத்து, மக்களை காத்து சாதனை படைத்தார் எடப்பாடியார். இன்றைக்கு தமிழகத்தின் எதிர்காலத்தை, தலையெழுத்தை எழுதக்கூட வாய்ப்பு எடப்பாடியாருக்கு உள்ளது அதற்காக 2026 தேர்தலில் மக்கள் தீர்ப்பளிப்பார்கள்.

இன்றைக்கு 5 சதவீதம் கூட அ.தி.மு.க. சாதனை செய்யவில்லை என்று ஸ்டாலின் கூறி சவால் விடுகிறார். நாங்கள் செய்த சாதனை சொல்லிக் கொண்டிருக்கிறோம். 525 தேர்தல் வாக்குறுதியில் 10 சதவீதம் கூட முதல்வர் ஸ்டாலின் நிறைவேற்றவில்லை.

தேர்தல் வரும் போது தான் மக்கள் ஞாபகம் முதல்வர் ஸ்டாலினுக்கு வரும். 2021 ஆண்டில் மகளிர் உரிமைத்தொகை அறிவித்தார் ஆனால் 2024 நாடாளுமன்ற தேர்தலில் தான் அதை மக்களுக்கு கொடுத்தார். அதேபோல தற்போது 2026 தேர்தல் மனதில் வைத்துக் கொண்டு பயனாளிகளின் எண்ணிக்கை உயர்த்துவேன் என்று கூறுகிறார்.

இன்றைக்கு அ.தி.மு.க. மிகப்பெரிய ஆளுமை இயக்கமாக உள்ளது இன்றைக்கு அ.தி.மு.க.வில் இருந்து சில சென்ற சிலர் அமைச்சராக உள்ளார்கள் அவர்களெல்லாம் அ.தி.மு.க. தாய்ப்பால் குடித்தவர்கள். அதே போல் தே.மு.தி.க.வில் பண்ருட்டி ராமச்சந்திரன் இருந்தார் அவர் கூட அ.தி.மு.க.வில் தாய்ப்பால் குடித்தவர்தான். அதேபோல ம.தி.மு.க.வில் சிலர் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தனர் அவர்களும் அ.தி.மு.க.வில் தாய்பால் குடித்தவர்கள்தான்.

எந்த கட்சியில் இருந்தாலும் அதில் அ.தி.மு.க.வில் பயிற்சி பெற்றவர்கள் தான். அ.தி.மு.க.வில் அனுபவம் பெற்றவர்கள் தான்.எத்தனை பேர் சென்றாலும் என்ன? அ.தி.மு.க. களப்போராளியாக நெஞ்சுரத்துடன் உள்ளது. இன்றைக்கு அ.தி.மு.க.வை வழி நடத்தி வெற்றிபாதையில் கொண்டு செல்ல எடப்பாடியார் உழைத்து வருகிறார். அ.தி.மு.க. கூட்டணி குறித்து? நடைபெற்ற செயற்குழு, பொதுக்குழுவில் கூட்டணி பற்றி முழு முடிவு எடுக்கும் அதிகாரத்தை

எடப்பாடியார் தான் முடிவு எடுப்பார் என்று தீர்மானம் நிறைவேற்றி உள்ளோம். இன்றைக்கு எடப்பாடியார் பல்வேறு தேர்தல் வியூகத்தை வகுத்து வருகிறார். நிச்சயம் எடப்பாடியார் தலைமையிலான என்.டி.ஏ. கூட்டணி வெற்றி கூட்டணியாக அமையும். இதுதான் உண்மையான கள நிலவரம், மற்றவை எல்லாம் கலவரம் ஆகும்.

அதுமட்டுமில்லாத 234 தொகுதிகளிலும் தற்போது 175 தொகுதிகளில் மக்களை நேரடியாக சந்தித்துள்ளார். இன்றைக்கு மக்களை சந்தித்த ஒரே தலைவர் எடப்பாடியார் தான் இந்த சாதனை யாரும் வெல்ல முடியாது. இவ்வாறு அவர் கூறினார்

**காணவில்லை**

கடந்த 10.12.2025ந் தேதி சிவகங்கை கோர்ட்டுவாசல் அருகே வரும்போது கையில் இருந்த சிவகங்கை இணை சார்பதிவாளர் எண்.2 அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட அசல் ஆவண எண்.1442/1978 (எரும்புகுடி கிராமம் சர்வே எண்.174/3, 174/4) அசல் ஆவணம் தொலைந்து விட்டது. மேற்கண்ட அசல் ஆவணத்தினை யாரேனும் கண்டெடுத்தால் கீழ் கண்ட முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.
கருப்பாயி
216, இலந்தகுடிப்பட்டி
காஞ்சிரங்கால் போஸ்ட்
சிவகங்கை.
செல் எண்.9942627486

**அறிவிப்பு**

சுற்றுப்புற சூழல் ஆணையத்தின் கடித எண் SIA/TN/MIN/548882/2025. dated 29.12.2025. மதுரை கோ. புதூர் சம்பகுளம், E 1, வைர பிரகாசம் அப்பார்ட்மெண்டில் வசித்து வருகிறேன். நான் சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி தாலுகா பிரான்மலை வருவாய் கிராமத்தில் S. F.NO 51/2H1C இல் மொத்த விஸ்திரணம் 1.99.29 Ha ஹெக்டேர் என்ற இடத்தில் குவாரி அமைக்க மாநில சுற்றுச்சூழல் ஆணையத்தின் அனுமதி பெற்றுள்ளேன். இதற்கான அனுமதி நகல் தமிழ்நாடு சுற்றுப்புற சூழல் ஆணையத்தின் (SEIAA) இணையத்தில் உள்ளது என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.
தனபாலன்
மதுரை

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
கட்டட அமைப்பு - ஒப்பந்த முறை : மொத்தத் தொகை

**குறுகிய கால மின்னனு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு எண்.26 / VLR- CLE / 2025 – 2026 / Dated.30.12.2025**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் வேலூர் பொதுப்பணித்துறை கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்ட கண்காணிப்புப் பொறியாளர் அவர்களால் அட்டவணையில் காணும் பணிகளுக்கு 09.01.2026 அன்று இறுதி நாளாக கொண்டு அலுவலக நேரப்படி பிற்பகல் 3.00 மணிவரையில் மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள், தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறையில் பதிவு செய்துள்ள தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. https://tntenders.gov.in என்ற இணையதளத்தின் மூலமாக ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 02.01.2026 முதல் 09.01.2026 அன்று பிற்பகல் 3.00 மணி வரை இலவசமாக பதிவிறக்கம் செய்து மின்னனு முறையில் சமர்ப்பிக்கலாம். பெறப்படும் மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் 09.01.2026 அன்று பிற்பகல் 4.00 மணியளவில் மின்னனு ஒப்பந்தப்புள்ளி முறையில் திறக்கப்படும்.

| வ. எண். | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு ஜி.எஸ்.டி. உட்பட (ரூபாய் இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை (ரூபாயில்) | பணி முடிக்க வேண்டிய காலம் (பருவ காலங்கள் உட்பட) |
|---|---|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் மாவட்டம், **சிறுகளத்தூர்** அரசினர் உயர் நிலைப் பள்ளியில் 6 வகுப்பறை கட்டடம் கட்டும் பணி | 109.40 | ரூ. 65,000 /- | 5 மாதங்கள் |
| 2. | காஞ்சிபுரம் மாவட்டம், **மாகான்யம்** அரசினர் உயர் நிலைப் பள்ளியில் 4 வகுப்பறை கட்டடம் கட்டும் பணி | 73.55 | ரூ. 47,000 /- | 8 மாதங்கள் |
| 3. | இராணிப்பேட்டை மாவட்டம், **இராணிப்பேட்டை** அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு Power Panel, Power Mains புதுப்பித்தல் மற்றும் LTUG Cable, மின் விளக்குகள் மற்றும் மின் விசிறி அமைக்கும் பணி. | 51.94 | ரூ. 36,000 /- | 2 மாதங்கள் |

ஒப்பந்தக்காரர் தகுதி : வகுப்பு IV மற்றும் அதற்குமேல் (ஒவ்வொரு பணிக்கும்) தள ஆய்வுச் சான்று விண்ணப்பிக்க கடைசி நாளும், இடமும் : 06.01.2026
வரிசை எண்.1 & 2 - செயற்பொறியாளர், பொபது., அலுவலகம், கட்டட (க&ப) கோட்டம், காஞ்சிபுரம்.
வரிசை எண்.3 – செயற்பொறியாளர்(மின்), பொபது., அலுவலகம், மின் கோட்டம், வேலூர். முன் வைப்புத் தொகைகளை இணையவழி மூலமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும். இதர விவரங்கள் மற்றும் விதிமுறைகளை https://tntenders.gov.in என்ற இணையதளத்தின் மூலமாக தெரிந்து கொள்ளலாம்.

கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து.,
கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு ) வட்டம், வேலூர்-1.
செ.ம.தொ.இ./6871/ஒப்பந்தப்புள்ளி/2025

## இந்தியா-நியூசி., ஒருநாள் தொடர்:
# ஆன்லைன் டிக்கெட் விற்பனை இன்று காலை தொடங்குகிறது




**மும்பை, டிச. 31-**
இந்தியா -நியூசிலாந்து இடையேயான ஒருநாள் கிரிக்கெட் தொடர் போட்டிக்கான ஆன்லைன் டிக்கெட் விற்பனை இன்று காலை காலை தொடங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**சுற்றுப்பயணம்...**
நியூசிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து மூன்று ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகள் மற்றும் 5 டி20 ஓவர் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்க இருக்கிறது. இதில் முதலில் ஒருநாள் தொடரும் அதனை தொடர்ந்து டி20 தொடரும் நடைபெற உள்ளது. இதற்கான முதல் ஒரு நாள் போட்டி வரும் ஜனவரி 11-ம் தேதி தொடங்க உள்ளது. ஜனவரி 14 மற்றும் 18 ஆம் தேதிகளில் முறையே 2-வது மற்றும் மூன்றாவது ஒருநாள் போட்டி நடைபெறுகிறது.

**விற்பனை தேதி...**
இந்த நிலையில் 3 ஒரு நாள் போட்டிகளுக்கான டிக்கெட் விற்பனை தொடங்கும் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி முதல் ஒரு நாள் போட்டிக்கான ஆன்லைன் டிக்கெட் விற்பனை இன்று (டிசம்பர் 31-ம் தேதி) காலை 11 மணி முதல் தொடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. 2-வது மற்றும் 3-வது ஒருநாள் போட்டிக்கான ஆன்லைன் டிக்கெட் விற்பனை ஜனவரி 1-ந் தேதி காலை 11 மணி முதல் தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஐ.பி.எல். 2026 பிளே ஆப் போட்டிகள்
# பஞ்சாப் மாநிலம் முல்லான்பூர் ஸ்டேடியத்தில் நடைபெறுகிறது


**மும்பை, டிச. 31-**
19-வது சீசன் அடுத்த வருடம் நடைபெற உள்ளது. அதன்படி, அடுத்த ஐ.பி.எல். தொடர் வரும் மார்ச் மாதம் தொடங்க உள்ளது என தகவல் வெளியாகி உள்ளது. இந்நிலையில் இந்த தொடரின் பிளேஆப் சுற்றுகள் பஞ்சாப் நகரில் முல்லான்பூர் ஸ்டேடியத்தில் நடைபெறும் என தகவல்கள் வெளியாகி உள்ளது

**மிகவும் முக்கியத்துவம்...**
இந்தியாவில் நடைபெறும் உள்ளூர் டி20 தொடரான இந்தியன் பிரீமியர் லீக் (ஐ.பி. எல்.) 18 சீசன்களை வெற்றிகரமாக கடந்து சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்தியாவில் டி20 கிரிக்கெட்டை வளர்க்கும் நோக்கில் கடந்த 2008-ம் ஆண்டு இந்த தொடங்கப்பட்ட இந்த தொடர் உலகளாவிய லீக் தொடர்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

**அமோக வரவேற்பு...**
இந்திய வீரர்கள் மட்டுமின்றி, வெளிநாட்டு முன்னணி வீரர்களும் இணைந்து விளையாடுவதால் இந்த சரவெடி கிரிக்கெட்டுக்கு ரசிகர்கள் மத்தியில் எப்போதும் அமோக வரவேற்பு உண்டு. இதன் 18-வது சீசன் கடந்த வருடம் நடைபெற்றது. இதில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி சாம்பியன் பட்டம் வென்றது.

**அடுத்த வருடம்...**
இதனையடுத்து இந்த தொடரின் 19-வது சீசன் அடுத்த வருடம் நடைபெற உள்ளது. அதன்படி, அடுத்த ஐ.பி.எல். தொடர் வரும் மார்ச் மாதம் தொடங்க உள்ளது என தகவல் வெளியாகி உள்ளது. இந்நிலையில் இந்த தொடரின் பிளேஆப் சுற்றுகள் பஞ்சாப் நகரில் முல்லான்பூர் ஸ்டேடியத்தில் நடைபெறும் என தகவல்கள் வெளியாகி உள்ளது. ஐ.பி. எல். 2025-ல் குவாலிஃபையர் 1 & எலிமினேட்டர் ஆகிய போட்டிகள் முல்லன்பூரில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

# பயிற்சியாளர் பதவியில் இருந்து கவுதம் காம்பீர் நீக்கம் இல்லை
## பி.சி.சி.ஐ. மீண்டும் திட்டவட்டம்



**புதுடெல்லி, டிச. 31-**
பயிற்சியாளர் பதவியில் இருந்து காம்பீர் நீக்கம் இல்லை என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் மீண்டும் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

**கடும் விமர்சனம்...**
இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக கவுதம் காம்பீர் கடந்த ஆண்டு ஜூலை 10-ம் தேதி நியமிக்கப்பட்டார். 2027-ல் நடைபெற உள்ள ஐ.சி.சி. ஒருநாள் உலக கோப்பை வரை அவரது பதவிக்காலம் இருக்கிறது. காம்பீரின் பயிற்சியின் கீழ் இந்திய அணி ஒரு நாள் மற்றும் 20 ஓவர் போட்டிகளில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. சாம்பியன்ஸ் டிராபி, ஆசிய கோப்பையில் சாம்பியன் பட்டம் வென்றது. ஆனால் டெஸ்டில் இந்திய அணி பெரிய அளவில் வெற்றிகளை பெறவில்லை. சொந்த மண்ணில் நியூசிலாந்து, தென் ஆப்பிரிக்காவிடம் முழுமையாக டெஸ்ட் தொடரை இழந்தது. இதனால் அவர் கடும் விமர்சனத்திற்கு உள்ளானார்.

**புதிய பயிற்சியாளர்...**
இதனால் டெஸ்ட் போட்டிக்கு புதிய பயிற்சியாளரை நியமிக்க பி.சி.சி.ஐ. (இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம்) முடிவு செய்ததாக தகவல் வெளியானது. இதற்காக முன்னாள் வீரர் வி.வி.எஸ். லட்சுமணனை பி.சி.சி.ஐ. அணுகியதாகவும் கூறப்பட்டது. இதை கிரிக்கெட் வாரியம் ஏற்கனவே நிராகரித்து இருந்தது. இந்த நிலையில் பயிற்சியாளர் பதவியில் இருந்து காம்பீர் நீக்கம் இல்லை என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் மீண்டும் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

**திட்டம் இல்லை...**
இது தொடர்பாக பி.சி.சி.ஐ துணைத் தலைவர் ராஜீவ் சுக்லா கூறியதாவது:- பயிற்சியாளர் கவுதம் காம்பீர் குறித்து பரவி வரும் தகவல்கள் குறித்து நான் மிக தெளிவாக கூற விரும்புகிறேன். இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளர் பதவியிலிருந்து காம்பீரை நீக்கவோ அல்லது புதிய பயிற்சியாளரை நியமிக்கவோ எந்த திட்டமும் இல்லை என்பதை பி.சி.சி.ஐ செயலாளர் (தேவஜித் சைகியா) மிகத் தெளிவாக தெரிவித்துவிட்டார். இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

## டி- 20 உலக கோப்பை 2026:
# இங்கி., ஓமன் அணிகள் அறிவிப்பு

**சென்னை, டிச. 31-**
10-வது ஐ.சி.சி. டி20 உலக கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான இங்கிலாந்து, ஓமன் அணிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

**4 பிரிவாக....**
20 அணிகள் இடையிலான 10-வது ஐ.சி.சி. டி20 உலக கோப்பை கிரிக்கெட் தொடர் பிப்ரவரி 7-ந்தேதி முதல் மார்ச் 8-ந்தேதி வரை இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெறுகிறது. இதில் பங்கேற்கும் 20 அணிகள் 4 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. இதில் நடப்பு சாம்பியனான இந்திய அணி 'ஏ' பிரிவில் பாகிஸ்தான், நமீபியா, நெதர்லாந்து மற்றும் அமெரிக்காவுடன் இடம் பெற்றுள்ளது.

**16 வீரர்கள்....**
இந்நிலையில் இந்த தொடருக்கான 16 வீரர்கள் கொண்ட இங்கிலாந்து அணி நேற்று அறிவிக்கப்பட்டது. இங்கிலாந்து அணியின் கேப்டனாக ஹாரி ப்ரூக் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த அணியில் அதிரடி வீரர்களான லியாம் லிவிங்ஸ்டன், ஜேமி ஸ்மித் ஆகியோருக்கு இடம் இல்லை. ஹாரி புரூக் (கேப்டன்), ரேஹான் அகமது, ஜோப்ரா ஆர்ச்சர், டாம் பேன்டன், ஜேக்கப் பெதெல், ஜாஸ் பட்லர், பிரைடன் கார்ஸ், சாம் கரண், லியாம் டாசன், பென் டக்கெட், வில் ஜாக்ஸ், ஜேமி ஓவர்டன், ஆதில் ரஷித், ஃபில் சால்ட், ஜோஷ் டங், மற்றும் லூக் வுட்.

**ஜிம்பாப்வேவை...**
டி20 உலகக் கோப்பை தொடருக்கான அணிகளை அந்தந்த நாட்டின் கிரிக்கெட் வாரியங்கள் அறிவித்து வரும் நிலையில், டி20 உலகக் கோப்பைத் தொடருக்கான ஓமன் அணியை அந்நாட்டு கிரிக்கெட் வாரியம் நேற்று அறிவித்துள்ளது. 15 பேர் கொண்ட அணியை ஜதிந்தர் சிங் கேப்டனாக வழிநடத்தவுள்ளார். ஆசிய கோப்பை டி20 தொடரில் ஓமன் அணிக்காக சிறப்பாக செயல்பட்ட 43 வயதாகும் ஆமிர் கலீம் அணியில் இடம்பெறவில்லை. ஓமன் அணி குரூப் பி பிரிவில் ஆஸ்திரேலியா, இலங்கை, ஜிம்பாப்வே மற்றும் அயர்லாந்து ஆகிய அணிகளுடன் இடம்பெற்றுள்ளது. பிப்ரவரி 9 ஆம் தேதி நடைபெறும் தனது முதல் போட்டியில் ஓமன் அணி ஜிம்பாப்வேவை எதிர்த்து விளையாடவுள்ளது குறிப்பிடத்தக்கது.

**ஓமன் அணி விவரம்:**
ஜதிந்தர் சிங் (கேப்டன்), விநாயக் சுக்லா (துணைக் கேப்டன்), முகமது நதீம், ஷகீல் அகமது, ஹம்மாத் மிர்சா, வாசிம் அலி, கரண் சோனாவாலே, ஃபைசல் ஷா, நதீம் கான், சூஃபியான் மெஹ்முத், ஜே ஒதேத்ரா, ஷஃபிக் ஜேன், ஆஷிஷ் ஒதேத்ரா, ஜித்தன் ரமணந்தி, ஹஸ்னைன் அலி ஷா.

# கோவையில் புதிய ஹாக்கி ஸ்டேடியம்

**து**ணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், தமிழ்நாட்டை விளையாட்டுத் துறையின் தலைநகராக மாற்றியிருக்கும் திராவிட-மாடல் அரசு சார்பில், முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலின் படி கோவை ஆர்.எஸ்.புரத்தில் சுமார் ரூ.10 கோடியில் அஸ்ரோ டர்ப் வசதியுடன் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச ஹாக்கி ஸ்டேடியத்தை திறந்து வைத்தோம்.

இரவிலும் போட்டிகளை நடத்தும் வகையில் மின்கோபுர விளக்குகளுடனும், அனைத்து நவீன வசதிகளுடனும் 7 ஏக்கரில் சர்வதேச தரத்தில் இந்த ஸ்டேடியம் உருவாக்கப்பட்டுள்ளது. முக்கியத்துவம் வாய்ந்த சர்வதேச மற்றும் தேசிய அளவிலான ஹாக்கி போட்டிகள் சென்னை, மதுரை போன்று இனி கோவையிலும் நடைபெற இருப்பதில் மகிழ்கிறோம். இந்த ஸ்டேடியத்தை கோவையைச் சேர்ந்த ஹாக்கி வீரர், வீராங்கனைகள் சிறந்த முறையில் பயன்படுத்தி, புதிய சாதனைகள் படைக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

# இந்திய வீராங்கனைகள் முன்னேற்றம்

**இ**ந்திய வீராங்கனைகள் ஐசிசி டி20 போட்டிகளுக்கான தரவரிசையில் முன்னேற்றம் அடைந்துள்ளனர். இந்திய அணியின் தொடக்க வீராங்கனையான ஷஃபாலி வர்மா இலங்கைக்கு எதிரான இரண்டாவது போட்டியில் 34 பந்துகளில் 69 ரன்கள் எடுத்து களத்தில் இருந்தார். மூன்றாவது போட்டியில் 42 பந்துகளில் 79 ரன்களும், 4-வது போட்டியில் 46 பந்துகளில் 79 ரன்களும் அவர் எடுத்தார். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய அவர் தவரிசையில் நான்கு இடங்கள் முன்னேறி 6-வது இடத்தில் உள்ளார். இந்திய அணியின் துணைக் கேப்டன் ஸ்மிருதி மந்தனா இலங்கைக்கு எதிரான தொடக்கப் போட்டிகளில் சரியாக விளையாடாவிட்டாலும், நான்காவது போட்டியில் அதிரடியாக 80 ரன்கள் எடுத்து அசத்தினார். தரவரிசையில் அவர் மூன்றாவது இடத்தில் நீடிக்கிறார். ஜெமிமா ரோட்ரிக்ஸ் ஒரு இடம் சறுக்கி 10-வது இடத்தில் உள்ளார்.

பந்துவீச்சாளர்களை பொருத்தவரையில் இந்திய அணியின் ஆல்ரவுண்டர் தீப்தி சர்மா முதலிடத்தில் உள்ளார். ரேணுகா சிங் தாக்குர் எட்டு இடங்கள் முன்னேறி 6-வது இடத்தில் உள்ளார். இலங்கைக்கு எதிரான மூன்றாவது டி20 போட்டியில் ரேணுகா சிங் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றி அணியின் வெற்றிக்கு உதவினார். இடதுகை சுழற்பந்துவீச்சாளர்களான ஸ்ரீ சரணி மற்றும் வைஷ்ணவி சர்மாவும் தரவரிசையில் முன்னேற்றம் கண்டுள்ளனர். ஸ்ரீ சரணி 17 இடங்கள் முன்னேறி 52-வது இடத்திலும், வைஷ்ணவி சர்மா 390 இடங்கள் முன்னேறி 124-வது இடத்திலும் உள்ளனர். இலங்கைக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் இந்திய அணி 4-0 என்ற கணக்கில் ஆதிக்கம் செலுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அணி ஆலோசகராக மலிங்கா

**ஐ**சிசி டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் வருகிற பிப்ரவரி 7 ஆம் தேதி தொடங்கி மார்ச் 8 ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. போட்டிகள் அனைத்தும் இந்தியா மற்றும் இலங்கையில் நடத்தப்படவுள்ளன. டி20 உலகக் கோப்பைத் தொடருக்காக அனைத்து அணிகளும் தயாராகி வரும் நிலையில், போட்டியை நடத்தும் நாடுகளில் ஒன்றான இலங்கை அந்த அணியின் வேகப் பந்துவீச்சு ஆலோசகராக முன்னாள் வேகப் பந்துவீச்சாளர் லசித் மலிங்காவை நியமித்துள்ளது முக்கியத்துவம் பெறுகிறது.

இலங்கை அணியின் வேகப் பந்துவீச்சு ஆலோசகராக மலிங்கா அடுத்த ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதி வரை செயல்படுவார் என இலங்கை கிரிக்கெட் வாரியம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மலிங்காவின் அனுபவம் இலங்கை அணிக்கு மிகுந்த உதவியாக இருக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கை அணிக்காக 84 டி20 போட்டிகளில் விளையாடியுள்ள லசித் மலிங்கா 107 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார். 42 வயதாகும் அவர் டி20 லீக் தொடர்களில் அணிகளுக்கு பயிற்சியளித்துள்ள அனுபவம் கொண்டவர். கடந்த 2021 ஆம் ஆண்டு அனைத்து விதமான கிரிக்கெட்டிலிருந்தும் ஓய்வு பெற்ற அவர், அணிகளுக்கு பயிற்சி மற்றும் ஆலோசனை வழங்குவதை செய்து வருகிறார். கடந்த 2022 ஆம் ஆண்டு இலங்கை அணிக்கு பந்துவீச்சு யுக்தி தொடர்பான பயிற்சியாளராக செயல்பட்டுள்ளார்.

# தனது இலக்கு குறித்து ரொனால்டோ

**போ**ர்ச்சுகல் கால்பந்து வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ (40) தற்போது அல் நாசர் கிளப் அணிக்காக விளையாடி வருகிறார். கால்பந்து வரலாற்றில் 956 கோல்கள் அடித்து, அதிக கோல்கள் அடித்த வீரர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார். இந்த நிலையில், 1,000 கோல்கள் அடிப்பதே என்னுடைய இலக்கு என ரொனால்டோ தெரிவித்துள்ளார். நான் நம்பிக்கையுடன் இருக்கிறேன், காயம் ஏதும் ஏற்படாமல் இருந்தால் நிச்சயம் அதை அடைந்து விடுவேன் எனவும் ரொனால்டோ தெரிவித்துள்ளார்.

2026 உலகக் கோப்பையுடன் சர்வேதேச கால்பந்து போட்டியில் இருந்து ஓய்வு பெறுவேன் என ரொனால்டோ அறிவித்து இருந்தார். இருப்பினும் கிளப் போட்டிகளில் அல் நாசர் அணிக்காக விளையாடும் ஒப்பந்தத்தை அவர் மேலும் 2 ஆண்டுகள் நீட்டித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்நாட்டில் அடுத்த 4 நாட்கள் மிதமான மழை பெய்ய வாய்ப்பு
## வானிலை ஆய்வு மையம் தகவல்

**சென்னை, டிச. 31-**
தமிழகத்தில் வருகிற 3-ம் தேதி வரை மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், வடக்கு கேரளா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இன்று கடலோர தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், உள் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இரவு/அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

01-ம் தேதி தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இரவு/அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். 02 மற்றும் 03-ம் தேதிகளில் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இரவு/அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். 04-மற்றும் 05-ம் தேதிகளில் தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

இன்று தமிழகத்தின் நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் இரவு /அதிகாலை வேளையில் உறைபனி ஏற்பட வாய்ப்புள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். இரவு / அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 30 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 23 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கோயம்புத்தூர் மாவட்டம் வடகோவை தமிழ்நாடு வனக்கல்லூரியில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு வனப்படை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் வனம் மற்றும் வனஉயிரின பாதுகாப்பு பணிகளுக்காக ஸ்போர்ட்டிங் ரைஃபிள்கள், ஆட்டோ பிஸ்டல்கள் உள்ளிட்ட படைக்கலன்களை துணை வன பாதுகாவலர், வனச் சரகர், வனவர் மற்றும் வனக் காப்பாளர்களுக்கு வழங்கினார்.

## சென்னை, அடையாறு மண்டலத்தில்
# ரூ.78.39 லட்சம் மதிப்பீட்டில் பல்நோக்கு மையக் கட்டிடம்
## அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்

**சென்னை, டிச. 31-**
சென்னை அடையாறு மண்டலத்தில் வார்டு-174க்கு உட்பட்ட பகுதிகளில் ரூ.78.39 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 பல்நோக்கு மையக் கட்டித்தினையும், உடற் பயிற்சிக் கூடத்தையும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;-

அமைச்சர் மா.சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு-174-க்கு உட்பட்ட வசந்தா பிரஸ் சாலையில், 174-வது வார்டு மாமன்ற உறுப்பினரின் வார்டு மேம்பாட்டு நிதியின் கீழ் ரூபாய் 9.62 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பல்நோக்கு மையக் கட்டிடம் மற்றும் பெசன்ட் நகர், 5-வது அவென்யூவில் மாமன்ற உறுப்பினரின் வார்டு மேம்பாட்டு நிதியின் கீழ் ரூபாய் 16 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு மையம் கட்டிடத்தினையும் திறந்து வைத்து இக்கட்டிடங்களில் செயல்படும் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்திற்குட்பட்ட அடையாறு-2, நியாய விலைக் கடை மற்றும் பெசன்ட் நகர் 4-வது கடை குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள், வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் அசன் மௌலானாவின் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூபாய் 42 லட்சம் மதிப்பீட்டில் வார்டு-174, பெசன்ட் நகர், 6-வது அவன்யூவில் கட்டப்பட்ட நவீன உடற்பயிற்சி கூடத்தினைத் திறந்து வைத்துப் பார்வையிட்டு, உடற்பயிற்சி கூடத்தில் உள்ள உபகரணங்களை பயன்படுத்தி உடற்பயிற்சி மேற்கொண்டார்.

பின்னர், சாஸ்திரி நகர் 4-வது சந்தில் 174-வது வார்டு மாமன்ற உறுப்பினரின் வார்டு மேம்பாட்டு நிதியில் ரூபாய் 10.77 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பல்நோக்கு மைய கட்டிடம் திறந்து வைத்து, இக்கட்டடத்தில் செயல்படும் சாஸ்திரி நகர் 2-வது நியாய விலைக் கடை குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் மற்றும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ரூபாய் 275/- என குறைந்த விலையில் பச்சரிசி, வெல்லம், முந்திரி, திராட்சை, ஏலக்காய், பாசிப்பருப்பு மற்றும் நெய் அடங்கிய பொங்கல் தொகுப்பினை அமைச்சர் வழங்கினார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புத்தாண்டு கொண்டாட்டம்
# சென்னையில் இருந்து மட்டும் 570 சிறப்பு பேருந்துகள் இயக்கம்

**சென்னை, டிச. 31-**
புத்தாண்டு கொண்டாட்டத்தை முன்னிட்டு சென்னையில் இருந்து மட்டும் 570 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

புத்தாண்டையொட்டி அரசு போக்குவரத்துக் கழகங்கள் சார்பாக பல்வேறு பகுதிகளுக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. கிளாம்பாக்கத்தில் இருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு நேற்று 240 பேருந்துகளும், இன்று 255 பேருந்துகளும் இயக்கப்படுகிறது.

கோயம்பேட்டில் இருந்து திருவண்ணாமலை, நாகப்பட்டினம், வேளாங்கண்ணி, ஓசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு இன்று 55 பேருந்துகளும் மாதவரத்தில் இருந்து 20 பேருந்துகளும் இயக்கப்பட உள்ளன. மேலும் சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூரு திரும்ப வசதியாக பயணிகளின் தேவைக்கேற்ப ஜனவரி 3-ந்தேதி 525 பேருந்துகளும், 4-ந்தேதி 765 சிறப்பு பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அரசு விரைவு போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குனர் மோகன் தெரிவித்து உள்ளார்.

## எஸ்.ஐ.ஆர். தொடர்பாக விளக்கம் கேட்டு
# தமிழகத்தில் 12.43 லட்சம் பேருக்கு நோட்டீஸ்

**சென்னை, டிச. 31-**
தமிழ்நாட்டில் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெற்ற 12.43 லட்சம் பேருக்கு விளக்கம் கேட்டு தேர்தல் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்(எஸ்.ஐ.ஆர்) கடந்த நவம்பர் 4 ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. வாக்குச்சாவடி அலுவலர்களால் வினியோகம் செய்யப்பட்ட படிவங்கள் அனைத்தும் பெறப்பட்ட நிலையில் கடந்த டிச. 19 ஆம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியானது. இதில், எஸ்.ஐ.ஆருக்கு முன்பு 6.41 கோடி வாக்காளர்கள் இருந்த நிலையில் தற்போது 5.43 கோடி வாக்காளர்கள் மட்டுமே உள்ளனர். எஸ்.ஐ.ஆர் நடவடிக்கைகளில் மொத்தம் 97,37,832 வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.

புதிய வாக்காளர்களைச் சேர்க்கும் பணி வருகிற ஜன. 18 வரை நடைபெறுகிறது. பிப்ரவரி 17 ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியாகும். இதனிடையே வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ள 12.43 லட்சம் பேருக்கு விளக்கம் கேட்டு தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

அதிகபட்சமாக சென்னையில் 2.37 லட்சம் பேர், திருவள்ளூரில் 1.85 லட்சம் பேர், சென்னையில் 2.37 லட்சம் பேருக்கு நோட்டீஸ் அளிக்கப்பட்டுள்ளது. அதாவது எஸ்.ஐ.ஆர் படிவத்தில் 2002, 2005ல் சம்பந்தப்பட்ட வாக்காளர் அல்லது அவர்களின் உறவினர்களின் பெயர் குறித்த விவரங்களை தராத வாக்காளர்களுக்கு இந்த நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நோட்டீஸ் பெற்றவர்கள் தேர்தல் ஆணையம் அங்கீகரித்த 13 ஆவணங்களில் ஏதேனும் ஒன்றுடன் வாக்குச்சாவடி அலுவரைத் தொடர்பு கொண்டு வாக்குச்சாவடி அதிகாரியிடம் நேரில் ஆஜராக வேண்டும்.

## இலங்கை கடற்படை மீண்டும் அட்டூழியம்:
# மேலும் 3 ராமேசுவரம் மீனவர்கள் கைது

**சென்னை, டிச. 31-**
இலங்கை கடற்படையால் மேலும் 3 ராமேசுவரம் மீனவர்கள் கைது செய்யப்பட்ட சம்பவம் மீனவர்கள் இடையே மேலும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகம் மற்றும் புதுவையை சேர்ந்த மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடிப்பதாகக் கூறி இலங்கை கடற்படையால் கைது செய்யப்படுவதும் மீனவர்களின் விசைப் படகுகளைப் பறிமுதல் செய்து அரசுடைமையாக்குவது போன்ற நடவடிக்கைகளையும் இலங்கை அரசு மேற்கொண்டு வருகிறது. இதனால் மீனவர்களின் வாழ்வாதாரம் வெகுவாக பாதிக்கப்படும் சூழலும் நிலவி வருகிறது.

இந்த நிலையில், ராமேசுவரத்தை சேர்ந்த மீனவர்கள் நேற்று முன்தினம் இரவு நெடுந்தீவு பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டியதாக கூறி 3 மீனவர்களை கைது செய்து இலங்கைக்கு அழைத்து சென்றனர். மேலும் அவர்களின் ஒரு படகையும் பறிமுதல் செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களை காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு கொண்டு சென்று இலங்கை கடற்படையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். மீனவர்கள் கைதான சம்பவம் மீனவ மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இதனை தடுக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

முன்னதாக கடந்த 28-ம் தேதி ராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற தமிழகத்தைச் சேர்ந்த 3 மீனவர்கள் பாரம்பரிய மீன்பிடிப் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது எல்லைத் தாண்டி மீன்பிடித்ததாக இலங்கைக் கடற்படையினர் கைது செய்த நிலையில் தற்போது மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்நாடு அரசின் திட்டங்களால் தி.மு.க. 7-வது முறையாக ஆட்சி அமைக்கும்: அமைச்சர் பேச்சு



**ஒட்டன்சத்திரம்,டிச.31-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் நடை பெற்ற திண்டுக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞ ரணி ஆலோசனைக் கூட்டத் திற்கு தலைமை வகித்து உணவு மற்றும் உணவுப் பொருள் துறை அமைச்சர் அர. சக்கரபாணி பேசியதா வது, இளைஞர் அணி நிர்வா கிகள் தமிழ்நாடு அரசின் சாத னைகளை வீடு தோறும் எடுத்துக்கூறி மீண்டும் ஏழா வது முறையாக தி.மு.க. ஆட்சி அமைத்து, மாண்பு மிகு தமிழ்நாடு முதலமைச் சர் இரண்டாவது முறையாக முதலமைச்சராக பொறுப் பேற்க அயராது உழைக்க வேண்டும். வருகின்ற ஜனவரி 31-ம் தேதி விருதுநக ரில் நடைபெறும் இளைஞ ரணி கூட்டத்தில் பேரறிஞர் அண்ணாவின் கூற்றுப்படி கடமை, கண்ணியம், கட்டுப் பாடு என்ற கோட்பாட்டின் படி அனைவரும் சீருடை யில் தவறாது கலந்து கொள்ள வேண்டும். வரு கின்ற காலங்களில் தமிழ் நாடு முதலமைச்சரும், துணை முதலமைச்சரும் இளைஞர்களுக்கு முன்னு ரிமை கொடுப்பதாக தெரி வித்துள்ளார்கள். அதனைஇ ளைஞர்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று பேசினார். இந்நிகழ்வில் பழனி சட்ட மன்ற உறுப்பினர் ஐ.பி. செந் தில்குமார், மாவட்ட அவைத் தலைவர் மோகன், முன் னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆண்டிஅம்பலம், மாநில இளைஞரணி துணைச் செய லாளர் சீனிவாசன், மாவட் டத் துணைச் செயலாளர் ராஜாமணி, ஐ.வாடிப்பட்டி முன்னாள்ஊராட்சி மன்ற முன்னாள்தலைவர் ஜோதீஸ் வரன், நகரச்செயலாளர் வெள்ளைச்சாமி, ஒன்றிய செயலாளர்கள் தர்மராஜ், சுப் பிரமணி, பொன்ராஜ், பாலு, தங்கம், சீனிவாசன், சாமிநா தன், கவிதா பார்த்திபன், ஷேக் சிக்கந்தர்பாட்சா, செயற்குழு உறுப்பினர் கண் ணன், மாவட்ட இளைஞ ரணி அமைப்பாளர் ஹரிஹர சுதன், துணை அமைப்பாளர் கள் பாண்டியராஜன், ஆனந் தராஜ், ரவிசங்கர், ராஜ்குமார், இப்ரின்ஆசித் உள்ளிட்ட மேற்கு மாவட்டத்தை சேர்ந்த மாவட்ட, ஒன்றிய,ந கர, பேரூர் அமைப்பாளர் கலந்து கொண்டனர்.

# கள்ளழகர் கோவிலில் வைகுண்ட ஏகாதசி விழாவை முன்னிட்டு சொர்க்கவாசல் திறப்பு

## கோவிந்தா கோவிந்தா என கோஷங்கள் முழங்க பக்தர்கள் சுவாமி தரிசனம்



**மேலூர்,டிச. 31-**

மதுரை மாவட்டம், மேலூர் அருகே கள்ளழகர் கோவிலில் ஆண்டுதோறும் மார்கழி மாதம் வைகுண்ட ஏகாதசி விழாவை முன் னிட்டு சொர்க்கவாசல் திறப்பு திருவிழா நடைபெறு வது வழக்கம். அதன்படி கடந்த சில தினங்களாக முதல் பகல் பத்து உற்சவ திருவிழா தொடங்கியது. தொடர்ந்து தினமும் கோவில் உள்பிரகாரத்தில் சுவாமி புறப்பாடு நடந்தது. திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியாக சொர்க்கவாசல் திறப்பு விழா நேற்று அதி காலை நடந்தது. இதில் மேளதாளம் முழங்க வர்ணக் குடை, தீவட்டி பரிவாரங்க ளுடன் நேற்று காலை 6.15 மணிக்கு கள்ளழகர் என்கிற சுந்தரராச பெருமாள் செர்க்க வாசல் வழியாக வந்து

அங்குள்ள சயன மண்ட பத்தை சுற்றி வந்து அதே மண்டபத்தில் எழுந்தருளி னார். முன்னதாக நம்மாழ் வார் பரமபத வாசல் வழி யாக பெருமாளை வரவேற் கும் நிகழ்வு நடந்தது. தொட ர்ந்து சுவாமிக்கு விசேஷ பூஜைகள், சிறப்பு அபிஷே கம் நடந்தது. சர்வ அலங்கா ரத்தில் சுந்தரராச பெருமாள் பக்தர்களுக்கு அருள் பாலித் தார். வைகுண்ட ஏகாதசியை யொட்டி நடந்த இந்த விழா வில் கொட்டும் பனியையும் பொருட்படுத்தாமல் சுற்று வட்டாரம் மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்து திர ளான பக்தர்கள் கோவிலுக்கு வந்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர்.இதற்கான ஏற்பா டுகளை அறங்காவலர் குழு தலைவர் வெங்கடாசலம், துணை ஆணையர் யக்ஞநா ராயணன், அறங்காவலர் குழு உறுப்பினர்கள் மற்றும் திருக்கோவில் கண்காணிப் பாளர்கள், பணியாளர்கள், அலுவலர்கள் செய்திருந்த னர். பாதுகாப்பு ஏற்பாடு களை அப்பன் திருப்பதி போலீசார் செய்திருந்தனர்.

# திருமங்கலம் சாரல் அரிமா சங்கத்தின் துவக்க விழாவில் புதிய நிர்வாகிகள் பதவியேற்பு



**திருமங்கலம்,டிச.31-**

மதுரை தென்றல் அரிமா சங்கத்தின் சார்பில் திருமங்க லத்தில் சாரல் அரிமா சங்கம் என்ற புதிய சங்கம் ஆரம்பிக் கப்பட்டு அதன் துவக்க விழாவும், புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழாவும் திரு மங்கலம் வள்ளி தெய் வானை திருமண மஹாலில் மதுரை தென்றல் அரிமா சங் கத்தின் தலைவர் லட்சுமி காந்தன் தலைமையில் சிறப் பாக நடைபெற்றது.

சாரல் அரிமா சங்கத்தின் பட்டய தலைவராக விஜய பாண்டியும், செயலாளராக விக்னேஷ், பொருளாளராக முத்துகுமாரும் மற்றும் சங் கத்தின் நிர்வாகிகளும் பொறுப்பு ஏற்று கொண்ட னர். இவர்களுக்கு அரிமா மாவட்ட ஆளுநர் செல்வம் அவர்கள் பதவி பிரமாணம் செய்து வைத்தார். இந்த விழாவில் முன்னாள் மாவட்ட ஆளுநர்கள் பாண் டிய ராஜன் மற்றும் செல்லப் பாண்டியன், அரிமா மாவட்ட முதல்நிலை ஆளு நர் ஆறுமுகம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். மேலும் இந்த விழாவில் அரிமா மாவட்ட அமைச்சரவை நிர் வாகிகள் பாலசுப்பிரமணி யன், தங்கத்துரை,ஜெயக்கு மார், வேல் முருகன்,க ணேஷ், இராதா கிருஷ்ணன், இளங்கோவன், ஆதிமூல ராஜன், ஸ்டாலின் ஆரோக்கி யராஜ், ஜெயக்குமார், பிரேமா செல்லப்பாண்டியன், மெய் யப்பன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங் கினர். இந்த விழாவில் திரு மங்கலம் நகராட்சியில் பணி புரிந்து வரும் 75 தூய்மை பணியாளர்களுக்கு சேலை யும், நலிந்த பிரிவினர் 25பே ருக்கு அரசி சிப்பமும், அரசு மருத்துவ மனைக்கு 25 தலை யனை மற்றும் 25 போர்வை கள் நலத்திட்ட உதவிகளாக வழங்கப்பட்டது. மேலும் இந்த விழாவில் மிக சிறந்த மனித நேய பண்பாளர் விருது ஓய்வு பெற்ற காவல் துறை துணை கண்காணிப்பா ளர் இராஜேந்திரன், தகை சால் தலைமை ஆசிரியர் விருது திருமங்கலம் அரசு மேல்நிலை தலைமை ஆசிரி யர் பாஸ்கர்,சிறந்த இளம் மருத்துவர் விருது டாக்டர் முரளிராஜ், சிறந்த சமூக ஆர் வலர் விருது வக்கீல் தங் கேஸ்வரன், சிறந்த வழக்கறி ஞர் விருது வக்கீல் சஞ்சய் காந்தி ஆகியோருக்கு வழங் கப்பட்டது.

விழாவின் இறுதியில் சங் கத்தின் செயலாளர் விக் னேஷ் நன்றி கூறினார். இந்த விழாவிற்காக அனைத்து ஏற் பாடுகளையும் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர்கள் இளங்கோ, முரளிதரன், திருப்பதி ஆகியோர் சிறப்பு டன் செய்திருந்தனர்.

## அருப்புக்கோட்டையில்
# வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு வரதராஜ பெருமாள் கோவிலில் சொர்க்க வாசல் திறப்பு



**அருப்புக்கோட்டை, டிச. 31-**

அருப்புக்கோட்டை அமுதலிங்கேஸ்வரர் கோவில் உள்ள ஸ்ரீதேவி பூதேவி சமேத வரதராஜ பெருமாள் கோவிலில் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு சொர்க்கவாசல் திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

அருப்புக்கோட்டையில் வைகுண்ட ஏகாதசி முன்னிட்டு விடிய விடிய பக்தர்கள் கண்விழித்து வைகுண்ட ஏகாதசி விர தம் கடைபிடித்தனர். பின்னர் அதிகாலை 3 மணிக்கு திருப் பள்ளி எழுச்சி நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து கோவில் வளாகத்தில் உள்ள வரதராஜ பெருமாள் கோவில் வளாகம் முழுவதும் பூக்கள் மட்டும் வண்ண விளக்குகளால் அலங்க ரிக்கப்பட்டிருந்தது. இந்த கோவிலில் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு வரதராஜ பெருமாளுக்கு 21 நறுமணப் பொருள் களின் கூடிய சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து அலங்காரம் தீபாரதனைகள் நடைபெற்றன. இதைத்தொடர்ந்து அதிகாலை முதல் ஆயிரத்திற்கு மேற்பட்ட பக்தர்கள் வரிசையில் நின்று வெள்ளிக் கவச அலங்காரத்தில் உள்ள வரதராஜ பெருமாள் தரிசனம் செய்து விட்டு சொர்க்க வாசல் வழியாக உற்சவரை தரிசனம் செய்து வந்தனர். பின் னர் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சி ஏற்பாடுகளை அருப்புக்கோட்டை நாடார் கள் உறவின் முறை தலைவர் சுதாகர்,டிரஸ்டி கணேசன் மற் றும் உறவின் முறை, கோயில் நிர்வாகிகள் செய்திருந்தனர்.

## முதுகுளத்தூர் அரசு கல்லூரியில்
# போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு முகாம்

**முதுகுளத்தூர், டிச.31-**

முதுகுளத்தூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் செயல்படும் போதைப்பொருள் எதிர்ப்பு குழு மற்றும் தமிழ் நாடு அரசு சுகாதாரத்துறை இணைந்து மாணவ-மாணவிக ளுக்கு உளவியல் ரீதியான ஆலோசனை மற்றும் போதைப் பொருள் எதிர்ப்பு பற்றிய விழிப்புணர்வு முகாம் நடைபெற் றது இதில் மருத்துவர் சஞ்சீவ் பாண்டியன் - அப்சர் அலி - அவிநாசி போன்ற மனநல மருத்துவர்கள் கலந்து கொண்ட னர் பேராசிரியரும் போதை பொருள் எதிர்ப்பு குழு ஒருங்கி ணைப்பாளருமாகிய வே.மகேந்திரன் அனைவரையும் வர வேற்றனர். நிதியாளர் பரந்தாமன் தலைமை தாங்கினர் .ஆங் கிலத்துறை தலைவர் ஆ.பாலமுருகன் தலைமை உரை ஆற் றினர் தமிழ்த்துறை பேராசிரியர் பாலசங்கர் நன்றி உரையாற் றினார் மேலும் தமிழ் துறை பேராசிரியை கோமதி நிகழ்ச்சி யினை தொகுத்து வழங்கினர். இந்நிகழ்ச்சியில் கல்லூரி மாணவ மாணவியர் 200க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

## திருமங்கலம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில்
# 204 வகையான வேளாண் விளை பொருட்களை 28 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்து சாதனை

**திருமங்கலம்,டிச.31-**

இந்தியாவிலேயே முதல் முறையாக திருமங்கலம் ஒழுங் குமுறை விற்பனை கூடம் 204 வகையான வேளாண் விளை பொருட்களை விற்பனை செய்தும் கடந்த நான்கு ஆண்டுக ளில் 28 கோடிக்கு விளை பொருட்களை விற்றும் சாதனை படைத்துள்ளது. திருமங்கலம் ஒழுங்கு முறை சிற்பனை கூடத் தில் மதுரை மாவட்ட உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மட்டுமின்றி வெளி மாவட்ட உழவர் உற்பத்தியாளர் நிறுவ னங்களின் மதிப்பு கூட்டப்பட்ட பொருள்களை விற்பனை செய்தும் தேவையான பொருட்களை வாங்க உதவி வருகி றது. மேலும் வெளி மாவட்ட மற்றும் பிற மாநில விவசாயி களுக்கும் விற்பனை செய்து தரப்படுகிறது.அத்துடன் விவசா யிகளின் விளைப் பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்காத சூழ்நிலையில் அதனை மதிப்பு கூட்டுவதற்கு ஏற்பாடு செய்து தரப்பட்டு அதனை விற்பனை செய்து கொடுத்தும் விவசாயி களுக்கு லாபம் ஈட்ட வழிவகை செய்கிறது. மேலும் நல்ல பொருட்களை நுகர்வோருக்கு கொண்டு சேர்ப்பதில் விவசா யிகளுக்கும் நுகர்வோருக்கும் பாலமாக திருமங்கலம் ஒழுங் குமுறை விற்பனை கூடம் செயல்பட்டு வருகிறது

பேஸ்புக், யு டியூப், இன்ஸ்டாகிராம், திரெட் போன்ற அனைத்து சமூகவலை தளங்களிலும் திருமங்கலம் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தின் நடைமுறைகள் மற்றும் விளை பொருட்களின் விலை நிலவரங்கள் பகிரப்பட்டு வருகிறது. இதன்மூலம் தமிழகத்தில் உள்ள விவசாயிகள் தாங்கள் விளை வித்த வேளாண் விளைபொருட்களின் அன்றாட விலை நில வரம் அறிய வழிவகை செய்கிறது. திருமங்கலம் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்திற்கென்றே தனியாக ஒரு யூடியூப் சேனல் மற்றும் வாட்ஸ்சாப் சேனல் செயல்பட்டு வருகிறது. அவ்வப்போது தேவைக்கேற்ப விவசாயிகள் மற்றும் வியா பாரிகளுக்கு தேவையான தகவல்கள் இதில் பரிமாறப் படுகி றது. இதுவரை திருமங்கலம் ஒழுங்குமுறை விற்பனை கூடத் தில் கடந்த நான்கு ஆண்டுகளில் 7900 மெட்ரிக் டன் விலை பொருட்களை 28 கோடிக்கு விற்பனை செய்துள்ளது.இதன் மூலம் 3500 விவசாயிகள் மற்றும் 483 வியாபாரிகளும் பயன் பெற்று உள்ளனர். இது போல் அனைத்து பயன்களையும் பெற நினைக்கும் விவசாயிகள், வியாபாரிகள், உழவர் உற்பத் தியாளர் நிறுவனங்கள் மற்றும் நுகர்வோர் கண்காணிப்பாளர் (9025152075), மேற்பார்வையாளர் (9600802823),சந்தை பகுப்பாய் வாளர் (8754379755) ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு பயன் பெற்றிடலாம்.

# அருப்புக்கோட்டை: விபத்தில் ஒருவர் பலி

**அருப்புக்கோட்டை, டிச. 31-**

ராமநாதபுரம் மாவட்டம் கமுதி தாலுகா கண்மாய்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் வழிவிட்டான்(வயது 55). விவசாயி யான இவர் மனைவி பொன்னுத்தாயுடன் (50) அருப்புக்கோட் டையில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் மருத்துவ பரிசோத னைக்காக நேற்று அதிகாலை நேரத்தில் மோட்டார் சைக்கி ளில் அருப்புக்கோட்டை நோக்கி சென்று கொண்டிருந்தார். திருச்சுழி சாலை காந்திநகர் பகுதியில் சென்று கொண்டிருந்த போது பின்னால் அதிவேகமாக வந்த அடையாளம் தெரியாத டாரஸ் லாரி வழிவிட்டான் ஓட்டி சென்ற மோட்டார் சைக் கிள் மீது மோதியது. இதில் கீழே விழுந்த பொன்னுத்தாய் மீது லாரியின் பின்பக்க டயர் ஏறி இறங்கியதில் பொன்னுத் தாய் தலை நசுங்கி சம்பவ இடத்திலேயே பலியானார். விபத்து ஏற்படுத்தி விட்டு லாரி நிற்காமல் சென்றது.

இதில் மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த வழிவிட்டான் லேசான காயத்துடன் உயிர் தப்பினார். விபத்து குறித்து அருப் புக்கோட்டை தாலுகா போலீசார் பொன்னுத்தாய் உடலை அருப்புக்கோட்டை அரசு ஆஸ்பத்திரிக்கு பிரேத பரிசோத னைக்காக அனுப்பி வைத்தனர். இது விபத்து குறித்து வழி விட்டான் அளித்த புகார் அடிப்படையில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலில் சொர்க்கவாசல் திறப்பு: பக்தர்கள் பங்கேற்பு



**ஸ்ரீவில்லிபுத்தூர்,டிச.31-**

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆழ் வார்களால் பாடல் பெற்ற வைணவ திருத்தலமாகும். அந்த வகையில் மார்கழி நீராட்டு உற்சவம் கடந்த 20ஆம் தேதி பச்சை பரத்தலு டன் தொடங்கி புகழ்பெற்ற உற்சவம் ஆரம்பித்தது. பத்து நாட்கள் காலை இரவு வேளைகளில் சுவாமிகள் வீதி உலா நிகழ்ச்சி சிறப்பு டன் நடைபெற்று முடிவ டைந்த நிலையில் நேற்று 30ந்தேதி அதிகாலை5:30ம ணிக்கு ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலில் வைகுண்ட ஏகாதசி முன் னிட்டு பரமபத வாசல் எனும் சொர்க்கவாசல் திறப்பு சிறப்பாக நடைபெற் றது.

இதனை முன்னிட்டு அதிகாலை ஆண்டாள் ரங்க மன்னாருக்கு சிறப்பு திரு மஞ்சனம் விசேஷ அலங்கா ரங்கள் செய்யப்பட்டு. அப் பொழுது சொர்க்கவாசல் கதவு திறக்கப்பட்டு அதன் வழியே மேளதாளம் முழங்க பெரிய பெருமாள் ஆண் டாள் ரங்க மன்னார் ஆகி யோர் வர சரியாக காலை 5:30 மணிக்கு பரமபத வாசல் என்னும் சொர்க்கவாசல் திறக்கப்பட்டது.தொடர்ந்து ஆண்டாள் ரங்க மன்னர் ராபத்து மண்டபத்திற்கு சென்று அங்கு பல்வேறு பூஜைகள் நடைபெற்றது. சொர்க்கவாசல் திறப்பு நிகழ்ச்சியில் மணவாள மாமுனிகள் மடத்தின் 24 வது பட்டம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சட கோப ராமானுஜ ஜீயர் சுவா மிகள், சட்டமன்ற உறுப்பி னர் மான்ராஜ், மாவட்ட நீதி பதி ஜெயக்குமார், மாவட்ட எஸ்.பி.கண்ணன் கோயில் செயல் அலுவலர் சௌ.சக் கரை அம்மாள் ஆய்வாளர் செ. முத்து மணிகண்டன் கண்காணிப்பாளர் அர்ஜுன் மற்றும் பல்லாயிரக்கணக் கான பக்தர்கள் அதிகாலை முதலே திரண்டு இருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண் டனர். ஸ்ரீவில்லிபுத்தூர் டி.எஸ்.பி. ராஜா தலைமை யில் நகர் இன்ஸ்பெக்டர் முத்துக்குமார் மற்றும் ஏரா மான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர் . சொர்க்கவாசல் திறப்பு தொடர்ந்து இராப்பத்து என் னும் திருவாய்மொழித் திரு நாள் நிகழ்ச்சிகள் ஆரம்பம் ஆகின்றன. இதனைத் தொடர்ந்து ஆண்டாள் என் ணெய்க்காப்பு உற்சவமும் நடைபெறுகிறது. சொர்க்க வாசல் திறப்பு சிறப்பு ஏற்பா டுகளை மதுரை அறநிலை யத்துறை இணை ஆணையர் செ. மாரியப்பன் விருதுநகர் உதவி ஆணையர் மு. நாகரா ஜன் கோயில் செயல் அலுவ லர் சௌ. சக்கரை அம்மாள் ஆய்வாளர் செ. முத்து மணி கண்டன் கண்காணிப்பாளர் அர்ஜுன் மற்றும் கோயில் அலுவலர் திருக்கோயில் பணியாளர்கள் சிறப்பாக செய்து இருந்தனர்.



**மதுரை யாதவா கல்லூரியில் உள்ள ராஜேந்திரனார் அரங்கில் தமிழ் உயராய்வு மையத்தின் சார்பில் தீம்பிழி கவிதை நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. இதில் கே.பி.எஸ். கண்ணன் நூலை வெளியிட அ.தி.மு.க. மாநில மருத்துவஅணி இணைச்செயலாளர் டாக்டர் பா.சரவணன் பெற்றுக்கொண்டு வாழ்த்துரை வழங்கினார். இதில் நூலாசிரியர் அழகுராஜ், கல்லூரியின் முதல்வர் முனைவர் செ.ராஜு,யாதவர் கல்லூரி தலைவர் எஸ். ஜெயராமன், செயலாளர் ஆர்.வி.என்.கண்ணன் பேராசிரியர்கள் பரந்தாமன், ஜெயபால் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.**



**திண்டுக்கல் எம்.வி.எம். நகர் வைகுண்ட ஏகாதாசியை முன்னிட்டு ஸ்ரீ தென்திருப்பதி திருக்கோவில் பரமபத வாசல் வழியாக பெருமாள் தாயார் அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். அது சமயம் கோயில் நிர்வாகி சரவணகுமார், அவர்களும் தேனி ஆனந்தம் நிறுவனர் எஸ்.ஜி.நடராஜன் மற்றும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.**

# நத்தம் வேணுகோபாலசாமி கோவிலில் சொர்க்கவாசல் திறப்பு



**நத்தம், டிச. 31-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் -கோவில்பட்டி அக்ர ஹாரத்தில் உள்ள வேணுகோ பாலசாமி கோவிலில் வைகு ண்ட ஏகாதாசியை முன்னி ட்டு சொர்க்கவாசல் திறக்கும் நிகழ்ச்சி நடந்தது. இதை யொட்டி சுவாமிக்கும், பாமா ருக்குமணி தேவியருக்கும் 16 வகையான அபிஷேகங்க ளும், அலங்காரம், தீபாராத னைகளும் நடந்தது. தொ டர்ந்து கோவிலில் உள்ள விநாயகர், வாராஹி அம்மன், கருடாழ்வார், ஆஞ்சநேயர் சுவாமிகளுக்கும் சிறப்பு அலங்காரங்கள் செய்யப் பட்டு பூஜைகள் நடந்தது. பின்னர் கோவிலை சுற்றி சுவாமி புறப்பாடு நடந்தது. இதில் சுற்றுவட்டார பகுதிக ளிலிருந்து ஏராளமான பக்தர் கள் கலந்துகொண்டு நெய்வி ளக்கேற்றி சுவாமி தரிசனம் செய்தனர். அவர்களுக்கு பிர சாதம் வழங்கப்பட்டது.



முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் முத்திரைத் திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் முருகானந்தம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக்கழகத்தின் கூடுதல் தலைமைச்செயலாளர் / தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஜெ.ராதாகிருஷ்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கோயம்புத்தூர் மாவட்டம் ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் நடைபெற்ற விழாவில் 9.67 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட உலகத்தரத்திலான அதிநவீன ஹாக்கி மைதானம் உள்பட 162.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 107 திட்டப் பணிகளை திறந்து வைத்து, 31.72 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 10,626 பயனாளிகளுக்கு 136.44 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பாராளுமன்ற உறுப்பினர்கள் கணபதி ப.ராஜ்குமார், க.ஈஸ்வரசாமி, கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி, மாவட்ட கலெக்டர் பவன்குமார் க.கிரியப்பனவர், மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன், துணை மேயர் வெற்றிச் செல்வன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர்.

## வடமாநில தொழிலாளர்கள்... (1-ம் பக்க தொடர்ச்சி)

அதை கட்டாயப்படுத்தி இங்கேயே சிகிச்சை எடுத்துக் கொள்ளுமாறு கூற முடியாது. அவருக்கு அரசு சார்பில் சிறப்பான சிகிச்சையும் பாதுகாப்பும் வழங்கப்பட்டது. வடமாநில இளைஞரை தாக்கிய 4 சிறுவர்களிடமிருந்து இரண்டு பட்டாக்கத்திகளும், இரண்டு செல்போன்களும் பறிமுதல் செய்யப்பட்டன. அவர்களில் 3 பேர் சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் அடைக்கப்பட்டுள்ளனர். இன்னொருவர் நீதிமன்ற உத்தரவின் பேரில் அவரது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். 4 சிறுவர்களுக்கும் அதிகபட்ச தண்டனை கிடைக்கும் வகையில், உச்சபட்ச பிரிவான 307 (கொலை முயற்சி) என்ற பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. வடமாநிலத்தவர் என்பதற்காக அந்த நபர் தாக்கப்படவில்லை. தமிழகத்தில் வடமாநில தொழிலாளர்கள் பாதுகாப்பாக உள்ளனர். இதுவரை இதுபோன்ற சம்பவம் நிகழ்ந்ததில்லை. தாக்குதலுக்குள்ளான நபருக்கு எத்தனை இடங்களில் காயங்கள் ஏற்பட்டுள்ளன என்பது துல்லியமாக தெரியவில்லை.

இருப்பினும் அதிகபட்ச தண்டனை கிடைக்கும் வகையிலான பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளோம். இது சமூக வலைத்தளங்களின் காலம் என்பதை போலீசாரும் உணர்ந்துள்ளோம். மாணவர்கள் மோதல்கள், சிறார்களின் ரீல்ஸ் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டு பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பல வழக்குகளில் மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக பெற்றோர்களை அழைத்து எச்சரிக்கை வழங்குகிறோம். சிறார் விவகாரங்களில் எல்லாவற்றிற்கும் சட்ட நடவடிக்கையே தீர்வு என போலீசார் செயல்பட முடியாது என்று அவர் தெரிவித்தார்.



சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் தலைமையில் தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு அரசின் அயலகத்தமிழர் தினம்-2026 சிறப்பாக நடத்துவது தொடர்பாக ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், பொது மற்றும் மறு வாழ்வுத்துறை செயலாளர் ரீட்டா ஹரிஷ் தக்கர், அயலகத்தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் வள்ளாளர், அரசு கூடுதல் செயலாளர் பாலசுப்பிரமணியம், அயலகத் தமிழர் நலவாரியத்தின் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி, அயலகத் தமிழர் நலவாரியத்தின் உறுப்பினர்கள் ராம், துபாய்மீரான் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கெண்டனர்.



சென்னை, கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் உள்ள கூட்டரங்கில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நெடுஞ்சாலைத்துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வுக் கூட்டத்தில், கண்காணிப்புப் பொறியாளர்கள், கோட்ட பொறியாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### வரும் சட்டமன்ற தேர்தலில்

# அ.தி.மு.க. தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும்: இ.பி.எஸ். பேச்சு

திருவள்ளூர், டிச. 31-

சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க. தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும் அதனை எந்த கொம்பனாலும் தடுக்க முடியாது. நம் கூட்டணி வெற்றிக் கூட்டணி என திருவள்ளூர் மாவட்டம் கவரப்பேட்டையில் எடப்பாடி பழனிசாமி பேசினார்.



மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம் என்ற பெயரில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி திருவள்ளூர் மாவட்டம் கவரப்பேட்டையில் பிரசாரம் மேற்கொண்டார். அதில் அவர் பேசியதாவது:-

தி.மு.க. என்ற இஞ்ஜின் இல்லாத காரை கூட்டணி என்ற லாரி 10 ஆண்டுகளாக இழுத்துச் செல்கிறது. அ.தி.மு.க.வை சிலர் விமர்சனம் செய்கின்றனர். அ.தி.மு.க.தான் எதிரிகளை வீழ்த்தும் பலமான கட்சி. தி.மு.க. கூட்டணி வைத்தபோது பா.ஜ.க. நல்ல கட்சி. அ.தி.மு.க. கூட்டணி வைத்தால் மதவாத கட்சியா?

56 மாதங்கள் விவசாயிகளுக்கும் விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கும் தி.மு.க. எதையும் செய்யவில்லை. தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணி தான் வெற்றி பெரும். அ.தி.மு.க. அழுத்தம் கொடுத்ததால் 100 நாள் வேலையை 125 நாட்களாக மத்திய அரசு அறிவித்தது. தி.மு.க. கூட்டணியில் புகைச்சல் கிளம்பிவிட்டது. வி.சி.க., இந்திய கம்யூனிஸ்டு கட்சிகள் ஆட்சியில் பங்கு கேட்கின்றனர்.

இந்தியாவிலேயே கடன் வாங்குவதில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது. தமிழக மக்களை கடனாளிகளாக்கி விட்டார் முதல்வர். கடனை செலுத்த வரி போடுவார்கள். அது மக்கள் தலையில்தான் வந்து விழும். கடனை குறைக்க நிதி மேலான்மை குழு அமைத்த பின்பு இன்னும் அதிகமாக கடன் வாங்கி இருக்கின்றனர். சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க. தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும் அதனை எந்த கொம்பனாலும் தடுக்க முடியாது. நம் கூட்டணி வெற்றிக் கூட்டணி.

இவ்வாறு அவர் கூறினார்.

### தமிழக மக்களுக்கு தொடர்ந்து உழைக்க

# திராவிட மாடல் அரசுக்கு ஆதரவு தர வேண்டும்

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பதிவு

சென்னை, டிச. 31-

தமிழக மக்களுக்கு தொடர்ந்து உழைக்க திராவிட மாடல் அரசுக்கு ஆதரவு தர வேண்டும் என்று கோவையில் 11 ஆயிரம் பேருக்கு நலத்திட்டங்களை வழங்கிய நிலையில் துணை முதல்வர் உதயநிதி பதிவிட்டுள்ளார்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு 'எல்லோருக்கும் எல்லாம்' என்கிற உயரிய தத்துவத்துடன் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், கோவையில் (நேற்று) நடைபெற்ற மாபெரும் அரசு விழாவில் சுமார் 11 ஆயிரம் பயனாளிகளுக்கு ரூ.137 கோடி மதிப்பிலான பல்வேறு நலத்திட்டங்களை வழங்கினோம்.

குறிப்பாக, 1,500 மகளிர் சுய உதவிக்குழு சகோதரிகளுக்கு வங்கி கடன் இணைப்புகள் - 1,500 பொதுமக்களுக்கு வீட்டுமனை பட்டாக்கள் - 211 மாற்றுத்திறனாளி சகோதர சகோதரிகளுக்கு இணைப்புச்சக்கரம் பொருத்தப்பட்டுள்ள ஸ்கூட்டர்கள் வாகனம் மற்றும் செவித்திறன் கருவிகள் - கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ஆணைகள் உட்பட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி வாழ்த்தினோம்.

இந்த நிகழ்வின் போது, ரூ.163 கோடி மதிப்பில் பணி நிறைவுபெற்ற திட்டங்களை திறந்து வைத்து, ரூ.32 கோடி மதிப்பிலான புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டினோம். தமிழ்நாட்டின் மக்களுக்கு தொடர்ந்து உழைத்திட, திராவிட மாடல் அரசு 2.O அமைந்திட ஆதரவு தர வேண்டும் என தெரிவித்துள்ளார்.

### தி.மு.க. தேர்தல் அறிக்கை தொடர்பான

# பிரத்யேக செயலியை இன்று துவக்கி வைக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்

## பொதுமக்கள் கருத்துகளை தெரிவிக்கலாம்

சென்னை, டிச. 31-

தி.மு.க. தேர்தல் அறிக்கை தொடர்பான பிரத்யேக செயலியை முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று துவக்கி வைக்கிறார். இதில் தேர்தல் அறிக்கை தொடர்பாக பொதுமக்கள் தங்களை கருத்துகளை தெரிவிக்கலாம்.

தமிழக சட்டசபையின் பதவிக்காலம் விரைவில் முடிவடைய உள்ளது. எனவே அடுத்த சட்டசபைக்கான தேர்தலை அடுத்த ஆண்டு (2026) மே மாதத்துக்குள் நடத்தி முடிக்க வேண்டும்.சட்டசபை தேர்தலுக்கான ஏற்பாடுகளை தேர்தல் கமிஷன் தொடங்கி விட்டது. இது ஒருபுறம் இருக்க அரசியல் கட்சிகள், முழுவீச்சில் தேர்தலுக்கான பணியை தொடங்கி இருக்கின்றன.

தற்போதைய சூழ்நிலையில் தி.மு.க., அ.தி.மு.க., த.வெ.க. ஆகிய 3 கட்சிகளின் தலைமையிலும், நாம் தமிழர் கட்சி தனித்தும் என நான்கு முனை போட்டி இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தி.மு.க. ஏற்கனவே தனது கூட்டணியில் உள்ள காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள், கம்யூனிஸ்டு கட்சிகள், ம.தி.மு.க. உள்ளிட்ட சில கட்சிகளுடன் இணைந்து வரும் சட்டசபை தேர்தலை எதிர்கொள்ள உள்ளது.

கடந்த தேர்தலில் தி.மு.க.வின் தேர்தல் வெற்றிக்கு அதன் தேர்தல் அறிக்கை தான் மிக முக்கிய காரணமாகும்.

இந்த நிலையில், தி.மு.க.வும் தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவை அமைத்துள்ளது. துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி தலைமையில் 12 பேர் கொண்ட தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவை தி.மு.க. அமைத்துள்ளது.

இந்நிலையில் தேர்தல் அறிக்கையில் பொதுமக்களின் கருத்துகளை பெறும் விதமாக பிரத்யேக செயலியை தி.மு.க. உருவாக்கி உள்ளது. இந்த செயலியை முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்.

## தமிழகம் முழுவதும் ... (1-ம் பக்க தொடர்ச்சி)

அறிவுறுத்தி உள்ளனர்.

குழந்தைகளை அழைத்து செல்வதை தவிர்க்க பெற்றோர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். 'பைக் ரேஸ்' என்ற பெயரில் பந்தயம் கட்டி மோட்டார் சைக்கிள்களில் இளைஞர்கள் அதிவேகமாக சென்று, சாகசம் செய்வதை தடுக்கவும் போலீசாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. 'பைக் ரேசில் ஈடுபடுகிறவர்கள் மீது கடும் நடவடிக்கை பாயும் என போக்குவரத்து போலீசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அதோடு புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு போலீசார் கடும் நிபந்தனைகளுடன் கூடிய கட்டுப்பாடுகளையும் விதித்துள்ளனர். குடி போதையில் வாகனங்கள் ஓட்டுபவர்கள் கைது செய்யப்படுவார்கள். சாலையின் நடுவே 'கேக்' வெட்டுவது, பட்டாசு வெடிப்பது, பெண்களை மடக்கி புத்தாண்டு வாழ்த்து சொல்வது போல அவர்களுடன் கைக்குலுக்கி பாலியல் சீண்டலில் ஈடுபடுவது போன்ற சம்பவங்களில் யாரும் ஈடுபட கூடாது என்று போலீசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். புத்தாண்டு கொண்டாட்டங்களின் போது விபத்துகளால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படாமல் தடுக்கவும் போலீசார் திட்டமிட்டுள்ளனர். புத்தாண்டு தினத்தன்று முக்கியமான சாலைகளின் நடுவே இரும்பு தடுப்புகளை அமைத்து, வாகனங்கள் வேகமாக செல்வதை கட்டுப்படுத்தவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளது.



மதுரை நாகமலை புதுக்கோட்டை - விராட்டிபத்து பகுதியில் புதிய நான்கு வழிசாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதில் விராட்டிபத்து பகுதி பொதுமக்களின் வசதிக்காக சாலையில் மாற்றம் கொண்டு வருவது தொடர்பாக அதிகாரிகளுடன் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. ஆய்வு செய்து ஆலோசனை வழங்கினார். அருகில் பொருளாளர் பா.குமார், வி.பி.ஆர்.செல்வகுமார், நீதிகாந்த ஆகியோர் உள்ளனர்.